ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2478/42 - 2026 මාර්තු මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.03.05

*2478/42 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**வலுசக்தி அமைச்சு**

**தேசிய மின்சார கொள்கை**

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி சட்டத்தின் (திருத்தப்பட்ட) பிரிவு 4 இன் துணைபிரிவு (5) இன் மூலம் எனக்கு வழங்கப்பட்டதன் பிரகாரம் தேசிய மின்சார கொள்கையின் ஒரு பாகமாக தேசிய கட்டணக் கொள்கையை உள்ளடக்கிய தேசிய மின்சார கொள்கை வலு சக்தி அமைச்சர் புண்ய ஸ்ரீ குமார ஜயக்கொடி ஆகிய நான், பொது மக்களின் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடுகின்றேன்.

**புண்ய ஸ்ரீ குமார ஜயக்கொடி**
வலுசக்தி அமைச்சர்

கொழும்பு,
2026, மாச்சு 05.

1A - G 46411 — 04 (2026/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**இலங்கையின் தேசிய மின்சாரக் கொள்கை**

வலுசக்தி அமைச்சு

**இலங்கை அரசாங்கம்**

2026.03.03

இலங்கையில் மின்சார விநியோகத் துறையின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடு ஆகியவற்றுக்கான கொள்கையை வெளிப்படுத்துவதற்கான வலுசக்தி அமைச்சின் ஆவணமொன்று.

2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தப்பட்டது) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அமைச்சரவையினால் 2026.03.03 ஆம் திகதி அங்கீகரிக்கப் பட்டது.

**1. அறிமுகம்**

உலகளாவிய சக்தித் துறையானது நிலைத்தன்மை, புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாடு, சக்தி சேமிப்பு, மின்சாரப் போக்குவரத்து, பசுமை ஐதரசன் மற்றும் அணுசக்தி போன்ற பல்வேறு தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளினால் உந்தப்பட்ட நகர்வுக்கான காலத்தின் மத்தியில் காணப்படுகின்றது. நுகர்வு முறைகளும் மற்றும் ஒழுங்குறுத்துகை கட்டமைப்புகளும் மாறி வருகின்ற காரணத்தினால் தூய சக்தி மூலங்களை நோக்கிய நகர்வு துரிதமாகியுள்ளது. எனினும், மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் கனிய எரிபொருட்கள் தொடர்ந்து முக்கிய பங்களிப்பைச்செய்து வருகின்றன. எனவே, நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தடையற்ற மின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒரு மூலோபாய சக்திக் கலவை முறைமையை பேணுவது மிக அவசியமாகும். ஒட்டுமொத்த அபிவிருத்தியை அடைவதற்கு தேவையான போட்டித்தன்மை வாய்ந்த ஒரு பொருளாதாரத்தை கொண்டிருக்கக் குறைந்த செலவிலான மின்சாரம் இன்றியமையாததாகும்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தினால் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு) அறிமுகப்படுத்தப்பட்ட மின்சாரத் துறை சீர்திருத்தங்களின் ஒரு முக்கிய மைல்கல்லின் கீழ் இந்த கொள்கை முன்வைக்கப்படுகின்றது. இலங்கையின் மின்சாரத் துறையை நவீன தொழில்நுட்பங்களையுடைய, போட்டித்தன்மை வாய்ந்த வெளிப்படையான ஒரு கைத்தொழிலாக மாற்றுவதற்கான மூலோபாயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. போட்டித்தன்மை, சிறந்த ஆளுகை, பொறுப்புக்கூறல், மேம்பட்ட வெளிப்படைத்தன்மை என்பவற்றின் ஊடாக மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதே இதன் நோக்கமாகும். இது இலங்கையை நிலைபெறுதகு விதத்தில் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்லும்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரகாரம் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு), தேசிய மின்சாரக் கொள்கை அந்த சட்டத்தின் நோக்கங்களையும், 2019, ஓகத்து 9 ஆம் திகதிய 2135/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள், பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அதன் திருத்தங்கள், இற்றைப்படுத்தல்கள் என்பவற்றைப் பிரதிபலிக்க வேண்டும்.

2019 ஓகத்து 9 ஆம் திகதிய 2135/61 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கையின் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள் (NEPS-2019) ஆவணத்தின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: *"இலங்கையானது முற்றுமுழுதான மின்சாரமயமாக்கல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி ஆகியவற்றில் தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள் ஆவணத்தில் (2008) நிர்ணயிக்கப்பட்ட பல இலக்குகளை அடைந்துள்ளது. தூய்மையான, பாதுகாப்பான, நிலையான, நம்பகமான மற்றும் பொருளாதார ரீதியில் சாத்தியமான சக்தி விநியோகத்தைப் பயன்படுத்தி, இலங்கையின் சம அபிவிருத்திக்கு வசதியான மற்றும் கட்டுப்படியாகக்கூடிய சக்தி சேவைகள் கிடைப்பதை உறுதிசெய்வதே இங்கு பிரகடனப்படுத்தப்படவுள்ள தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகளினதும் முக்கிய நோக்கமாகும்".*

2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள் (NEPS-2019) ஆவணம், 2019 ஆம் ஆண்டில் இலங்கை ஐக்கிய நாடுகளின் மனித அபிவிருத்தி சுட்டியில் (UN Human Development Index) நடுத்தர மட்டத்தில் இருந்ததையும், அதேவேளை 2017 ஆம் ஆண்டில் வருடாந்த தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி 4,065 அமெரிக்க டொலராக நடுத்தர மட்டத்தில் இருந்ததையும் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள் (NEPS-2019) ஆவணமானது, அடுத்த பத்தாண்டுகளுக்குள் நாட்டை உயர் நடுத்தர வருமான நிலைக்குக்கொண்டு செல்வதற்கான அரசாங்கத்தின் உந்துதலானது, இலங்கையின் பொருளாதாரத்தில்

சக்தியின் பங்களிப்பை தீவிரப்படுத்தியுள்ளதை அங்கீகரித்துள்ளது. பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தும் அதேவேளையில், குறைந்த சக்தி செறிவை[1] பேணுவதே இலங்கைக்கு உள்ள சவால் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இலங்கையானது 100% மின்சாரமயமாக்கல் (electrification) எனும் முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளதாகவும், அதன் மூலம் அனைத்து பிரஜைகளும் நவீன சக்தி மூலங்களை வழங்கும் இலக்கை நிறைவேற்றியுள்ளதாகவும், NEPS-2019 ஆவணமானது மேலும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் முதன்மை சக்தி தொகுப்பில் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பு ஏற்கனவே பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ள நீர்மின் சக்தியினால் (hydro power potential) படிப்படியாகக் குறையும் சாத்தியமுள்ள நிலையில், வீட்டு உபயோக தேவைகள் கனிம எரிபொருட்களை நோக்கி மாறுவதால் அதிகரித்து வருகின்ற சக்தி தேவையை ஈடுசெய்ய கனிம எரிபொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவதையும், குடிநீருக்கும் மற்றும் விவசாயத்திற்கும் அடுத்ததாக மின் உற்பத்திக்கு 3-வது முன்னுரிமை அளிக்கப்படுவதையும் கருத்திற் கொண்டு, 2019 ஆம் ஆண்டுக்கு முன்னைய தசாப்தங்களில் 55% ஆக இருந்த முதன்மை சக்தி விநியோகத்திலுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான கொள்கை ரீதியான ஒரு பெரும் மாற்றம் இந்த NEPS-2019 இன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மை சக்தி விநியோகம் என்பது மின்சாரத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக பல்வேறு சக்தி மூலங்களிலிருந்து நம்பகமான, செலவு குறைந்த மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த விலையிலான சக்தி சேவைகளை வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு, சக்தித் துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய சவால்களை எதிர்கொள்வதற்கான இலங்கையின் திட்டத்தை முன்வைக்கும் வகையில் இந்த NEPS-2019 வடிவமைக்கப்பட்டுள்ளது.

*“இலங்கையை ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் 7- ஆவது இலக்குடன் சீரமைப்பதால் 2020 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் கட்டுப்படியாகக்கூடிய, நம்பகமான, நிலையான மற்றும் நவீன சக்தி கிடைப்பதை உறுதிசெய்வதற்கு இந்த கொள்கை பங்களிக்கும்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

2019 ஆம் ஆண்டில் NEPS-2019 வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியையடுத்து, மின்சாரக் கட்டணங்கள் கட்டுப்படியாகக்கூடிய அளவைத் தாண்டியதால், குறைந்த வருமானமுடைய சுமார் 14% முதல் 15% வரையிலான குடும்பங்கள் மற்றும் சிறு வணிகங்கள் என்பவற்றுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக, 2019 தேசிய மின்சக்திக் கொள்கையின் முக்கிய அடிப்படை நோக்கங்களில் ஒன்று அந்தக் காலப்பகுதியில் மீறப்பட்டது. மேலும், பல சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SMEs) இதுவரை மீண்டும் இணைக்கப்படாமல் உள்ளன.

2019 தேசிய மின்சக்திக் கொள்கையிலுள்ள மைல்கற்கள் எந்தளவிற்கு எட்டப்பட்டுள்ளன என்பதை சரிபார்த்து மதிப்பீடு செய்யும் பொருட்டு ஒரு மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும். குறித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இந்த மின்சார கொள்கை பொருத்தமான முறையில் திருத்தப்படும்.

இந்த தேசிய மின்சாரக் கொள்கை இத்தகையதொரு பின்னணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கை, தற்போது நடைமுறையில் இருக்கின்ற 2019 ஆம் ஆண்டின் தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் உத்திகளையும் இற்றைப்படுத்தும் அதேவேளையில், அதன் ஒரு பகுதியாகவும் அமைகின்றது. 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான) கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள புதிய நிறுவனக் கட்டமைப்பிற்குள் குறித்த நிறுவனங்கள் முழுமையாக செயற்படுவதற்கு தொடங்கியதும் உரிமம் பெற்ற தரப்பினருடன் கலந்தாலோசித்து இந்த தேசிய மின்சாரக் கொள்கை மறுபரிசீலனை செய்து திருத்தப்படும்.

மின்சாரக் கட்டணத்தின் மிகப்பெரிய பகுதி மின் உற்பத்திக்கான செலவே என்பதை இந்த கொள்கை அங்கீகரிக்கின்றது. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கின்ற அதே வேளையில், புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பை விரிவுபடுத்துவது இந்தக் கொள்கையின் நோக்கமாகும். செலவைக் குறைத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடையும் முகமாக புதுப்பிக்கத்தக்க சக்திக் கொள்வனவு, போட்டித்தன்மை வாய்ந்த கேள்விமனு முறையின் மூலமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மின்சார உற்பத்தியில் அதிக செலவு வாய்ந்த சக்தி மூலம் எண்ணெயின் மூலாக இயங்கும் வெப்ப மின் உற்பத்தி பொறித்தொகுதிகள் என்பதை அங்கீகரித்து, அத்தகைய மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் உற்பத்தி சார்ந்த செலவு ஒழுங்குறுத்துகை அமைப்பினால் துல்லியமாக பரிசீலிக்கப்படும். அத்தகைய மின் உற்பத்தி பொறித்தொகுதிகளை சொந்தமாகக் கொண்டுள்ள நிறுவனங்கள், அந்த செலவுகள் நியாயமானவை என்பதை நிரூபிக்க வேண்டும். நேஷனல் சிஸ்டம் ஆபரேட்டர் பிரைவேட் லிமிடெட் (NSO), செலவுகளைக் குறைக்கும் பொருட்டு சக்தி மூலங்களை பன்முகப்படுத்தும் முயற்சிகளை மிகக்குறுகிய காலத்திற்குள் உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

மின் உற்பத்தித்திறன் விரிவாக்கத்திற்கான சாத்தியங்களை ஆராயுமாறு Electricity Generation Lanka (Pvt) Ltd. (EGL) நிறுவனமும், தற்போதுள்ள நீர்த்தேக்கங்களின் கொள்ளளவில் வெளியாகும் நீரை முறைப்படுத்துமாறு National System Operator (Pvt) Ltd. (NSO) நிறுவனமும் தேவைப்படுத்தப்படுகின்றன.

[1] மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ரூபா 1 மில்லியன் உற்பத்தி செய்யத் தேவையான சக்தியின் அளவு.

NSO, எலக்ட்ரிசிட்டி ஜெனெரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (EGL) உடன் கலந்தாலோசித்து, அத்தகைய ஏற்பாடு செய்யப்படும் நீர் மின் நிலையங்களின் திறன் விரிவாக்கத்தின் சாத்தியக்கூறுகளையும், தற்போதுள்ள நீர்த்தேக்கங்களில் வேறு ஏதேனும் திறன் விரிவாக்கங்களையும் ஆராய வேண்டும். மேலதிகமாக, NSO, மின் உற்பத்தி மற்றும் பிற தேவைகளுக்காக நீரை வெளியிடுவதில் நீர்த்தேக்க திறனைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கு அனைத்து தொடர்புடைய பங்குதாரர்களுடனும் கலந்தாலோசித்து ஆராயும்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 4(2) மற்றும் 4(3) இன் படி (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டது) ஒழுங்குமுறை அதிகாரி, நேஷனல் சிட்டம் ஆபரேட்டர் (பிரைவேட்); லிமிடெட், உரிமதாரர்கள், நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்தும், சட்டத்தின் பிரிவு 4(4) இன் படி போதுமான பொது பங்குதாரர் ஆலோசனைக்குப் பிறகும் இந்த தேசிய மின்சாரக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கையும் தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையும் இலங்கையின் பொருந்தக்கூடிய சட்டங்களின்படி விளக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கையும் தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையும் இலங்கையின் பொருந்தக்கூடிய சட்டங்களின்படியும் அவற்றுக்கு இணங்கும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

## 2. கொள்கைக் கூற்றுக்கள்

தேசிய மின்சாரக் கொள்கையில் ஐந்து (5) அடிப்படைக் கொள்கைகள் மற்றும் ஆறு (6) இணைக் கொள்கைகளும் உள்ளடங்குகின்றன.

### 2.1. அடிப்படைக் கொள்கைகள்

1. மின்சார விநியோகத்தின் பாதுகாப்பும் சுதந்திரமும் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.
2. மின்சார சேவைகளுக்கு பாதுகாப்பான சமமான அணுகல் உத்தரவாதப்படுத்தப்படுதல் வேண்டும்.
3. மின்சார சேவைகள் தேசியப் பொருளாதாரத்திற்கு உகந்த செலவில் வழங்கப்படுதல் வேண்டும்.
4. மின்சார சேவைகளை பெற்றுக்கொள்வதிலும் விநியோகிப்பதிலும் சுயசார்பு மேம்படுத்தப்படுதல் வேண்டும்.
5. மின்சார துறையை சார்ந்த நிறுவனங்களின் நீண்டகால நிதி நிலைத்தன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

### 2.2. சமகாலக் கொள்கைகள்

I. மின்சக்தி வினைத்திறனும் மின்சார சிக்கனமும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.
II. புதுப்பிக்கத்தக்க சக்தி-மைய மின் உற்பத்தியின் பங்கு அதிகரிக்கப்படுதல் வேண்டும்.
III. மின்சார துறையில் பொதுப் பயன்பாட்டு நிறுவனங்களின் நல்லாட்சியும் மற்றும் பொறுப்புக்கூறலும் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.
IV. மின்சார விநியோக முறைமைகளினதும் நுகர்வோர் சேவைகளினதும் டிஜிட்டல் மயமாக்கல் துரிதப்படுத்தப்படுதல் வேண்டும்.
V. தேசிய சுற்றாடல் மற்றும் காலநிலை தொடர்பான கொள்கைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
VI. எதிர்கால மின்சாரத்துறையின் அபிவிருத்தியின் நிமித்தம் தேவையான காணிகள் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அனுமதி மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறைகளும் சீரமைக்கப்படுதல் வேண்டும்.

## 3. கொள்கை விவரங்கள்

### 3.1. அடிப்படைக் கொள்கைகளின் விவரங்கள்

**1. மின்சார விநியோகத்தின் பாதுகாப்பும் சுதந்திரமும் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.**

நாட்டின் மின்சார விநியோகத்தின் போது அது தொடர்ந்து கிடைத்தல், போதியளவு வழங்கல், தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பன உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். மின்சார விநியோகம் தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, ஏதாவது நிதி மற்றும் புவிசார் அரசியல் உறுதியற்ற தன்மைகள் அல்லது தொழில்நுட்ப மாற்றங்கள் என்பவற்றைத் தாங்கக்கூடிய வகையில் ஏதுவாக மின்சார விநியோகத்தின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**2. மின்சார சேவைகளுக்கு பாதுகாப்பான சமமான அணுகல் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.**

அனைத்து பிரஜைகளினதும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்கள் இலாபகரமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் ஏதுவாக நம்பகமான, வசதியான, கட்டுப்படியாகக்கூடிய, பாதுகாப்பான மற்றும் தரமான மின்சார சேவைகளுக்கு சமமான அணுகல் வழங்கப்படும்.

**3. தேசியப் பொருளாதாரத்திற்கு உகந்த செலவில் மின்சார சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும்.**

தேசியப் பொருளாதாரத்தின் மீதான சுமையை குறைப்பதற்கும், பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் நீண்டகால அடிப்படையில் உகந்த செலவில் மின்சார சேவைகள் வழங்கப்படும். எதிர்கால

மின் உற்பத்தி மற்றும் விநியோக ஆற்றல் விரிவாக்கங்கள் அனைத்தும், குறைந்த செலவு அடிப்படையிலான உகந்த திட்டமிடல் கொள்கைகளின்படி; NSO வினால் நிர்ணயிக்கப்படும்.

4. **மின்சார சேவைகளை பெற்றுக்கொள்வதிலும் மற்றும் விநியோகிப்பதிலும் சுயசார்பு மேம்படுத்தப்படுதல் வேண்டும்.**
இறக்குமதி செய்யப்படும் வளங்களில் தங்கியிருப்பைக் குறைப்பதற்காக, தொழில்நுட்ப, பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான தடைகள் தீர்க்கப்படுவதற்கமைய, உள்நாட்டு சக்தி வளங்கள் உகந்த மட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படும்.

மின்சாரத்தைப் பயன்படுத்தி புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் உள்ளூர் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கும் இருக்கின்ற அவசியத்தை அங்கீகரித்து, விவசாயம், கிராமிய மற்றும் ஆரம்ப கைத்தொழில் என்பவற்றில் மின்சாரத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தும் புதிய பயனாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். இதன் போது பெண்களையும் இளைஞர் யுவதிகளையும் ஊக்குவிப்பதில் விஷேட கவனம் செலுத்தப்படும்.

5. **மின்சார துறை சார்ந்த நிறுவனங்களின் நீண்டகால நிதி நிலைத்தன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.**
செலவு பிரதிபலிப்பு மின்சாரக் கட்டணங்களை அறிமுகப்படுத்துவதோடு, மின்சாரத் துறை ஒழுங்குறுத்துகை படிப்படியாக செயல்திறன்-மைய ஒழுங்குறுத்துகை முறைமைக்கு மாற்றப்பட்டு, மின்சாரத் துறை நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் நிதி நிலைத்தன்மையை அதிகரிக்கும், இதன் மூலம் இறுதிப் பயனர் வாடிக்கையாளருக்கு நன்மைகளை வழங்கும்.

3.2. சமகாலக் கொள்கைகளின் விவரங்கள்

I. **மின்சக்தி திறன் மற்றும் மின்சார சிக்கனம் ஆகியவை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.**
துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மின்சார விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இரண்டு தரப்பினரையும் ஈடுபடுத்தி, எல்லா துறைகளிலும் மின்சாரம் வினைத்திறன் வாய்ந்ததாக பயன்படுத்தப்படுவதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் அளிக்குமாறு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுக்கப்படும்.

II. **புதுப்பிக்கத்தக்க சக்தி-மைய மின் உற்பத்தியின் பங்களிப்பு அதிகரிக்கப்படுதல் வேண்டும்.**
குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் மின்சாரத் துறையில் அதிகளவான மீள்திறனை எட்டுவதற்கும் உள்நாட்டு புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் உகந்த மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும்.

III. **மின்சாரத் துறையில் பொதுப் பயன்பாட்டு நிறுவனங்களின் நல்லாட்சியும் மற்றும் பொறுப்புக்கூறலும் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.**
மின்சாரத் துறையின் அனைத்து செலவுகளும் இறுதியில் நுகர்வோராலேயே சுமக்கப்படுகின்றன என்பதைக் கருத்திற் கொண்டு, பொறுப்புக்கூறல், நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்வதன் மூலம் அனைத்து நுகர்வோருக்கும் கட்டுப்படியாகக்கூடிய மற்றும் நம்பகமான மின்சாரத்தை வழங்க ஏதுவாக அதன் ஆளுகை வலுப்படுத்தப்படும். மேலும் ஒரு நிலையான கொள்கை சூழல் மற்றும் வலிமையான ஒழுங்குறுத்துகை கட்டமைப்பின் ஊடாக உகந்த செலவில் சேவைகளை வழங்குவதற்கு உரிமம் பெற்றவர்களின் பணிப்பாளர் சபையினர், ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் வணிகத்தில் ஈடுபடுகின்ற தரப்பினர் ஆகிய அனைவருமே இங்கு பொறுப்பாக்கப்படுவார்கள். தமது செயல் அல்லது செயலின்மை குறித்து நுகர்வோருக்கு பதிலளிக்கக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

உரிமதாரர்கள் தங்கள் திட்டமிடல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தொடர்புடைய தரவுகளைச் சேகரித்து சரியான நேரத்தில் பகிரங்கப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், அந்த உரிமம் பெற்றவர்களின் பணிப்பாளர் சபையினர், ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் வணிகத்தில் ஈடுபடும் அனைத்து தரப்பினரும் இறுதி நுகர்வோருக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பார்கள்.

IV. **மின்சார விநியோக முறைமைகளினதும் நுகர்வோர் சேவைகளினதும் டிஜிட்டல் மயமாக்கல் துரிதப்படுத்தப்படுதல் வேண்டும்.**
மின்சார துறை செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதையும் நுகர்வோர் அனுபவத்தை மேம்படுத்துவதையும் நோக்காகக்கொண்டு, கொள்வனவு முதல் ஸ்மார்ட் மீற்றர் (smart metering) வரையிலான மின்சார விநியோக சங்கிலியின் டிஜிட்டல் மயமாக்கல் பணி துரிதப்படுத்தப்படும். நுகர்வோர்களின் தேவைக்கேற்ப மின்சாரப் பாவனையை மாற்றியமைத்தல் மற்றும் மின் கட்டமைப்பிற்கு நெகிழ்தன்மை கொண்ட சேவைகள் வழங்கப்படுவதை சாத்தியமாக்கும் முகமாக ஸ்மார்ட் கிரிட் (mart grid) தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். மேலும் மின் கட்டமைப்பின் நிர்வாகத்தில் நுகர்வோர் வழங்கும் பங்களிப்பிற்கு நியாயமான இழப்பீடு கிடைப்பதும் இதன் மூலம் உறுதிசெய்யப்படும்.

V. **தேசிய சுற்றாடல் மற்றும் காலநிலை தொடர்பான கொள்கைகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.**
மின்சார கொள்கை தேசிய சுற்றாடல் மற்றும் காலநிலை பற்றிய கொள்கைகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

IV. **எதிர்கால மின்சாரத்துறையின் அபிவிருத்தியின் நிமித்தம் தேவையான காணிகள் உறுதிப்படுத்தலும் அனுமதி மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறைகளும் சீரமைக்கப்படுதல் வேண்டும்.**

எதிர்கால மின்சாரத் துறை மேம்பாடுகளுக்குத் தேவையான நிலங்களை அடையாளங் காண்பதுடன் அவற்றின் உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதன் அவசியத்தையும், சமூகப் பாதிப்புகள் மற்றும் மீள்குடியேற்றச் செலவுகள் ஆகியவற்றைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் அங்கீகரித்து, மின் உற்பத்தி, மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு திட்டங்களின் அடிப்படையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் எதிர்காலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும். மேலும் நிர்வாக ரீதியான தாமதங்களைக் குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட அனுமதி மற்றும் அனுமதிப்பத்திர செயல்முறைகளை எளிதாக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## 4. தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையின் சுருக்கம்

தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கை 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டது) ஏற்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்படுகிறது, மேலும் ஒழுங்குமுறை அதிகாரி மற்றும் அனைத்து உரிமதாரர்களும் சட்டத்தின்படியும் அதற்கு இணங்கும் வகையிலும் பின்பற்றப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 4 (10) (எ) இன் அடிப்படையில் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டது), இந்த தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையை செயல்படுத்துவதற்கு வசதியாக அமைச்சர் அவ்வப்போது எழுத்து பூர்வமாக கொள்கை வழிகாட்டுதல்களை வெளியிடலாம்.

### 4.1 தேசிய கட்டணக் கொள்கைக் கூற்று

மின்சாரம் வழங்கல், திறன், மின்சார சக்தி மற்றும் பிற தொடர்புடைய துணைச் சேவைகளை வழங்குவதற்கான செலவுகள், விலைகள் மற்றும் விலை அமைப்பு ஆகியவை கூட்டாக மின்சார கட்டணங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

1. கட்டணங்களில் சேர்க்கப்பட்டுள்ள உற்பத்தி செலவுகள், போட்டித்தன்மையுடன் கொள்முதல் செய்யப்படும் மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களின் அடிப்படையில் செலவுகள் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் பாதுகாப்பு-கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

2. மொத்த கொள்முதல் கட்டணங்கள், மொத்த விற்பனை கட்டணங்கள், பரிமாற்ற கட்டணங்கள், திறந்த அணுகல் கட்டணங்கள், விநியோக கட்டணங்கள் மற்றும் இறுதி பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களின் நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக செலவு பிரதிபலிக்கும் வகையில் இருக்கும். இது நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட செயல்திறன் அளவுகோல்களை பூர்த்தி செய்தால் மட்டுமே சாத்தியமாகும்.

3. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் வகைப்பாடு, கட்டணங்கள் மற்றும் கட்டண விருப்பங்கள் ஏதேனும் இருந்தால், ‘தேசிய மின்சார சந்தை” ஆரம்பிக்கும் வரை அனைத்து விநியோக உரிமதாரர்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்.

4. வீடுகளுக்கான லைஃப்லைன் (Lifeline) கட்டணங்கள் மற்றும் பிற மானிய கட்டணங்கள் தகுதியுள்ள நுகர்வோரை இலக்காகக் கொண்டிருக்கும். மானியங்களுக்கான நிதி படிப்படியாக குறுக்கு மானியங்களிலிருந்து நேரடி பட்ஜெட் ஒதுக்கீடுகளுக்கு மாற்றப்படும்.

5. மேலே உள்ள கொள்கை அறிக்கைகள் (3) மற்றும் (4) இன் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஒவ்வொரு வாடிக்கையாளர் வகைக்கும் செலவு-பிரதிபலிப்பு கட்டணங்கள் பயன்படுத்தப்படும். தகுதியான, மோசமாக பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படும்.

6. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் பொருளாதார நடவடிக்கைகள், செலவு குறைந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திறமையான பயன்பாடு, கேள்வி முகாமைத்துவம் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

7. கட்டண நிர்ணய செயல்முறையின் தனித்துவமான அம்சங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் பருவகாலத்தன்மை மற்றும் புதைபடிவ எரிபொருள் விலைகளின் மாறுபாடுகள் காரணமாக இறுதி பயன்பாட்டு நுகர்வோர் ஏற்ற இறக்கங்கள் மென்மையாக்கப்படும்.

8. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் போட்டியிடும் பொருளாதாரங்களில் இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்களுடன் ஒப்பிடப்படும்.

9. உரிமதாரர்கள் காலப்போக்கில் சுயநிதி நிறுவனங்களாக நிதி ரீதியாக சாத்தியமானவர்களாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் கட்டணங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். நிறுவனங்கள் போதுமான நிதி ஆதாரங்களைக் குவிக்கும் வரை, அத்தியாவசிய முதலீடுகளுக்கு நிதியுதவி பெறுவதற்கு அரசாங்க உத்தரவாதங்கள் வழங்கப்படும்.

## 5. முடிவுகளை வழங்கும் கட்டமைப்பு

அடிப்படை கொள்கைக் கூற்றுக்களும் சமகால கொள்கைக் கூற்றுக்களும் முடிவுகளை வழங்கும் கட்டமைப்பில் விவரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

### 5.1. அடிப்படைக் கொள்கைகளுக்கான முடிவுகளை வழங்கும் கட்டமைப்பு :

**1. மின்சார விநியோகத்தின் பாதுகாப்பும் சுதந்திரமும் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.**

சக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அடையாளங் காணப்பட்ட மூலோபாயங்களை செயற்படுத்துவதற்கு, பின்வரும் இலக்குகளும் மைல்கற்களும் எட்டப்படும்.

(அ) மின்சாரத் துறையின் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் மேம்படுத்தும் பொருட்டு அதிக செலவு வாய்ந்த எண்ணெய்-மைய மின் உற்பத்தியை குறைந்த செலவு வாய்ந்த சக்தி மூலங்களைக்கொண்டு மாற்றியமைப்பது ஒரு முன்னுரிமைப் பணியாக கருதப்படும்.

(ஆ) விட்டுவிட்டு இயங்கும் புதுப்பிக்கத்தக்க சக்தி-மைய மின் உற்பத்தியின் அதிகரித்த பங்களிப்பை கருத்திற்கொண்டு, நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மின் கட்டமைப்பு வலுப்படுத்தப்படும்.

(இ) சக்தி கூட்டுறவு சங்கங்களினதும் மற்றும் திரட்டுநர்களினதும் ஊடாக இணைக்கப்பட்ட நுண்-மின் கட்டமைப்புகள், மீற்றருக்கு பின்னாலுள்ள மின்கல சக்தி சேமிப்பு முறைமைகள் மற்றும் மெய்நிகர் மின் உற்பத்தி பொறித்தொகுதிகள் (VPP) போன்ற ஸ்மார்ட்-கிரிட் எண்ணக்கருக்களை ஊக்குவிப்பதன் மூலம் மின்சார விநியோக சங்கிலியில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான முன்முயற்சிகளை NSO உம் மற்றும் பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்களும் மேற்கொள்ள வேண்டும்.

(ஈ) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து ஒரு நாளைக்கு முன்னதான, அன்றைய தினத்திற்கான முன்னறிவிப்புகளைப் பெறும் ஒரு தளத்தை NSO, எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து செயல்படுத்துவது அமைப்பின் சிறந்த திட்டமிடல் மற்றும் செயற்பாட்டை வலுப்படுத்தும்.

(உ) புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியின் குறைப்பை ஆகக்குறைந்த மட்டத்திற்குக்கொண்டு வருவதற்கும் மற்றும் மின்சார முறைமையின் திட்டமிடுகையையும் செயற்பாட்டையும் மேம்படுத்துவதற்கும் ஏதுவாக, புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து ஒரு நாளைக்கு முன்னதான, அன்றைய தினத்திற்கான முன்னறிவிப்புகளை (day-ahead and intra-day forecasts) பெறக்கூடிய ஒரு தளத்தை NSO, Electricity Distribution Lanka (Pvt) Ltd. (EDL) உடன் இணைந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

(ஊ) நுகர்வு வீதங்கள், விநியோக காலப்பகுதிகள், கையிருப்பு செலவு மற்றும் பிரதியீட்டு எரிபொருட்களின் செலவு ஆகியவற்றை கருத்திற்கொண்டு, நம்பகமான விநியோகஸ்தர் ஒருவரைக்கொண்டிருப்பதுடன், மின் கட்டமைப்புடனும் இணைக்கப்பட்ட ஒவ்வொரு வெப்ப மின் உற்பத்தி பொறித்தொகுதியும் குறைந்தபட்ச நுகர்வு காலத்திற்கு இணையான ஒரு மூலோபாய எரிபொருள் கையிருப்பை பேண வேண்டும்.

(எ) மின்சார உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய உள்நாட்டு சக்தி வளங்களின் முழுமையான ஒரு விபரப்பட்டியல் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுதல் வேண்டும்.

**2. மின்சார சேவைகளுக்கான பாதுகாப்பான சம அணுகல் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.**

(i) சகல பிரஜைகளினதும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் (ii) குறிப்பாக சிறிய, நடுத்தர, நுண் தொழில்முயற்சிகளில் இலாபகரமான பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கும் என

நம்பகமான, வசதியான, கட்டுப்படியாகக்கூடிய, பாதுகாப்பான மற்றும் தரமான மின்சார சேவைகளுக்கான சம அணுகலை வழங்குவது ஒரு முன்னுரிமையாக கருதப்படும்.

(அ) தகுதிவாய்ந்த நுகர்வோருக்கு மானியங்கள் வழங்கப்படுவதை இந்த கொள்கை தேவைப்படுத்துகின்றது. இந்த மானியங்களுக்கான நிதியளிப்பு முறை, குறுக்கு மானிய முறையிலிருந்து படிப்படியாக நேரடி வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டுக்கு மாற்றப்படும்.

(ஆ) மானியங்களுக்கு தகுதியான நுகர்வோர் பிரிவினர், அவ்வப்போது நடத்தப்படும் ஆய்வுகளினதும் மற்றும் பொதுமக்களுடனான ஆலோசனைகளினதும் அடிப்படையில் ஒழுங்குறுத்துகை அமைப்பினால் அடையாளங் காணப்படுவார்கள்.

(இ) மின்சாரத் துறையின் அனைத்து பரிவர்த்தனைகளையும் பதிவுசெய்வதற்காக ஒரு டிஜிட்டல் தளம் தாபிக்கப்படும். இந்த தளம், கைத்தொழில் மற்றும் வணிகம் ஆகிய துறைகளுக்கான புதிய மின் இணைப்புகள் அடங்கலாக இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துவதற்கும் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய நுகர்வோருக்கு சமூக பாதுகாப்பை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும்.

(ஈ) இணக்கத்தன்மை, ஒருங்கிணைப்பு வசதி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்த மின்சார விநியோக சங்கிலியில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நியமப்படுத்தப்படும்.

(உ) பாதுகாப்பு, மேன்மை, நம்பகத்தன்மை மற்றும் மரங்களினால் ஏற்படும் தடைகளை குறைத்தல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பொருத்தமான தொழில்நுட்பங்களுடன் மின் பகிர்ந்தளிப்பு கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

**3. மின்சார சேவைகள் தேசியப் பொருளாதாரத்திற்கு உகந்த செலவில் வழங்கப்படுதல் வேண்டும்.**

தேசிய பொருளாதாரத்தின் மீதான சுமையை குறைக்கும் வகையில், சக்தி சேவைகள் நீண்டகால அடிப்படையில் உகந்த செலவில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களினால் பின்வரும் இலக்குகளும் மற்றும் மைல்கற்களும் அடையப்படுதல் வேண்டும்.

(அ) 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு) ஏற்பாடுகளுக்கு இணங்க மிகவும் குறைந்த விலையைப் பெறும் நோக்கில் அனைத்து கொள்வனவுகளும் போட்டித்தன்மை வாய்ந்த விலைமனுக்கோரல்அடிப்படையில் அமைந்திருத்தல்.

(ஆ) அனைத்து வகையான மின்சார உற்பத்தி, மின்சார செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு என்பவற்றுக்காக வெளிப்படையான மற்றும் செலவை பிரதிபலிக்கக்கூடிய விலை நிர்ணய முறையியல் ஒன்று, ஒழுங்குறுத்துனரினால் நிர்வகிக்கப்படும் ஒழுங்குறுத்துகை பொறிமுறையினூடாக உரிமம் பெற்றவர்களால் நடைமுறைப்படுத்தப்படுதல்.

(இ) கிரிட் பாதுகாப்பு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, வெளிப்படையான தகுதி ஒழுங்கு பொருளாதார உற்பத்தி அனுப்புதலை செயல்படுத்துவதை NSO உறுதி செய்யும்.

(ஈ) நம்பகத்தன்மையற்ற தன்மையினால் ஏற்படும் வழங்கப்படாத மின்சக்தியின் (unserved energy) அளவைக் குறைப்பதன் மூலம், பொருளாதாரத்தின் மீதான சுமை குறைக்கப்படுதல்.

**4. மின்சார சேவைகளை பெற்றுக்கொள்வதிலும் மற்றும் விநியோகிப்பதிலும் சுயசார்பு மேம்படுத்தப்படுதல் வேண்டும்.**

(அ) செலவு, தொழில்நுட்ப கட்டுப்பாடுகள், ஒவ்வொரு வளத்தினதும் தரம் என்பவற்றை கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்படும் முன்னுரிமை வரிசை ஒழுங்கில் மீளப்புதுப்பிக்கத்தக சக்தி வளங்கள் பயன்படுத்தப்படும். இதனை அடையும் பொருட்டு வீடுகள், வணிகங்கள் அல்லது கைத்தொழில்துறை ஆகிய துறை மட்டங்களில் மின்சார தேவையை பூர்த்தி செய்யக்கூடிய இடங்களிலெல்லாம் மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை இலாபமாக பயன்படுத்துவதற்கு மின்சார பகிர்ந்தளிப்பு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

(ஆ) உட்பொதிக்கப்பட்ட உற்பத்தி, ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் மற்றும் தேவை பக்க வளங்களை உள்ளடக்கிய பரவலாக்கப்பட்ட ஆற்றல் வளங்கள் (Distributed Energy Resources - DER), அதிர்வெண் பதில், மின்னழுத்த ஆதரவு, இருப்பு, ரேம்பிங் ஆதரவு மற்றும் நெரிசல் மேலாண்மை போன்ற துணை சேவைகளை வழங்க படிப்படியாக செயல்படுத்தப்படலாம். அத்தகைய துணை சேவைகளின் தொழில்நுட்ப தகுதி, அனுப்புதல் மற்றும் இழப்பீடு ஆகியவற்றிற்கான கட்டமைப்புகள் ஒழுங்குமுறைகள், குறியீடுகள் மற்றும் சந்தை வழிமுறைகள் மூலம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

(இ) பொருந்தக்கூடிய குறியீடுகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, தேசிய மின்சார அமைப்பின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, மின்சார தரம் மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டைக் கண்காணிக்கவும் உகந்த முறையில் கட்டுப்படுத்தவும் அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

(ஈ) உயிரியல்திணிவு பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் சாத்தியமான ஒருஎரிபொருளாக கழிவுகளைக்கொண்டு பிரத்தியேகமான சக்தி பெருந்தோட்டங்களை (energy plantation) அல்லது பெருந்தோட்டங்களைத் தாபிப்பதன் மூலம், வணிகளவில் மின் உற்பத்திக்கு கிடைக்கக்கூடிய உயிரியல்திணிவு சக்தி மேம்படுத்தப்படும். மேலும், மின்சார உற்பத்தி நிமித்தம் மாநகர கழிவுகளின் உகந்த பாவனைக்கு ஆதரவளிக்கப்படுதல் வேண்டும்.

5. **மின்சார துறை சார்ந்த நிறுவனங்களின் நீண்டகால நிதி நிலைத்தன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்**

(அ) மின்சாரக் கட்டண கொள்கையில் செலவை பிரதிபலிக்கக்கூடிய மின்சார விலை நிர்ணய முறையை திட்டவட்டமாக நடைமுறைப்படுத்துதல்.

(ஆ) மின்சார பயன்பாட்டு நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு தேவையான ஒருதரப்படுத்தல் முறையை (Benchmark) தாபித்தல்.

(இ) ஒழுங்குறுத்துநர், செயல்திறன் சுட்டிகளை பூர்த்திசெய்யும் பொருட்டு உரிமம் பெற்றவர்களுக்கு ஒரு செயல்திறன்-மைய ஒழுங்குறுத்துகை கட்டமைப்பை நோக்கி நகர்வதற்கான ஒரு வழிகாட்டி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.

(ஈ) செயல்திறன் இலக்குகளை அடைவதற்கும், தரமான வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதற்கும் அதிவிஷேடமாக பங்களிக்கும் ஊழியர்களுக்கு சிறப்பு வெகுமதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிமம் பெற்றவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

(உ) மின்சார கட்டணமானது அதன் உண்மையான செலவை பிரதிபலிப்பதை உறுதிசெய்வதற்காக, குறுக்கு மானியங்களையும் பல்வேறு மேலதிகக் கட்டணங்களையும் படிப்படியாகக் குறைப்பதற்கான ஒரு வழிகாட்டி வரைபடத்தை (roadmap) ஒழுங்குபடுத்துநர் உருவாக்க வேண்டும். அத்தகைய வழிகாட்டி வரைபடம், பாவனைகால அடிப்படையிலான கட்டண முறையை (Time-of-use-Tariff) செயற்படுத்துவதற்கான மூலோபாயங்கள், வெளிப்படையான மற்றும் சமமான மின் விநியோக செலவு கணக்கீடுகள் மற்றும் இதனால் மோசமாக பாதிக்கப்படக்கூடிய நுகர்வோருக்கு இடைக்கால நிவாரணங்களை (transitional relief) வழங்குதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

5.2. **சமகாலக் கொள்கைகளுக்கான முடிவுகள் வழங்கும் கட்டமைப்பு :**

I. **மின்சார வினைத்திறனும் மற்றும் மின்சார சேமிப்பும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.**

(அ) சக்தி வினைத்திறனையும் மற்றும் சேமிப்பையும் மேம்படுத்துவதற்காக, பாரிய அளவிலான கைத்தொழில்துறையினதும் மற்றும் வணிகளவிலான நுகர்வோரினதும் சக்தி கணக்காய்வுகள் (energy audits) கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். அதேவேளையில், கைத்தொழில்துறை உபகரணங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்து மின் சாதனங்கள் என்பவற்றினதும் குறைந்தபட்ச சக்தி செயல்திறன் நியமங்கள் மேம்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(ஆ) மின் உற்பத்தி மற்றும் தொழில்முறை செயற்பாடுகளில் ஆற்றலையும் மாற்றும் திறனையும் மேம்படுத்துவதற்காக, சக்தி கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு ஓர் ஊக்குவிப்புப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்படும்.

(இ) ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பொதுமக்களிடையே சக்தி சேமிப்பு மற்றும் அதன் வினைத்திறன் வாய்ந்த பயன்பாடும் ஊக்குவிக்கப்படும். சக்தி பாதுகாப்பு முயற்சிகளில் நுகர்வோர் பங்கேற்பதை ஊக்குவிப்பதற்கான ஒரு திட்டம் தாபிக்கப்படும்.

II. **புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின் உற்பத்தியின் பங்களிப்பு அதிகரிக்கப்படுதல் வேண்டும்.**

(அ) புதுப்பிக்கத்தக்க சக்தியின் பயன்பாட்டை அதிகரிக்க, மின் அமைப்பு படிப்படியாக சேமிப்பு தொழில்நுட்பங்களின் கலவையைப் பயன்படுத்தி மிகை புதுப்பிக்கத்தக்க அடிப்படையிலான மின்சார உற்பத்தியை உள்வாங்கும். சேமிப்பு வழிகளுக்கான திட்டமிடலில், அமைப்பு தேவைகள், வாழ்க்கைச் சுழற்சி செலவுகள், மறுமொழி திறன், பொதுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களைக் கருத்தில் கொண்டு வெளிப்படையான தொழில்நுட்ப-பொருளாதார அளவுகோல்களை NSO பின்பற்றும்.

(ஆ) புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திக்கான செலவைப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் நுகர்வோருக்கு அதன் பலன்களை அதிகப்படுத்துவதற்காக, அனைத்து புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின்சார கொள்வனவுக்கும் முழுமையான போட்டித்தன்மை வாய்ந்த கேள்விமனு நடைமுறை செயற்படுத்தப்படும். ஏற்கனவே ஒப்பந்தத்தின் மூலம் உடன்பட்டுள்ள வழங்கல் கட்டணங்கள் (feed-in-tariff) நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு இணங்க மதிக்கப்படும். மேலும், தேவையான சட்டப்பூர்வ அனுமதிகளைப் பெற்றிருந்தும் இன்னும் ஒப்பந்தங்களை செய்து கொள்ளாத நபர்களுக்கு, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி உரிய கவனம் செலுத்தப்படும்.

(இ) 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான) இலங்கை மின்சார சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவும், 2019 ஆம் ஆண்டின் "தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் உத்திகள்" ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைப்பாடுகளுக்கு இணங்கவும், எதிர்கால உற்பத்தித்திறன் விரிவாக்கங்களுக்கான வழங்கல் கட்டணங்கள், ஒவ்வொரு புதுப்பிக்கத்தக்க சக்தி தொழில்நுட்பத்தினதும் வணிக ரீதியான முதிர்ச்சியின் அடிப்படையில் படிப்படியாக நிறுத்தப்படும்.

(ஈ) மின்சார சேமிப்புச் சேவைகளை ஒரு துணைச் சேவை சந்தையில் இணைப்பதற்கான ஒரு வழிகாட்டல் வரைபடத்தை நஷனல் சிஸ்டம் ஒபரேற்றர் (பிறைவெட்) லிமிடெட் (NSO) தயாரிக்க வேண்டும்.

III. **மின்சார துறையிலுள்ள பொதுப்பயன்பாட்டு நிறுவனங்களின் நல்லாட்சியும் பொறுப்புக்கூறலும் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.**

(அ) தரவுகளைச் சேகரிப்பதற்கும், தொகுப்பதற்கும் மற்றும் பரம்பல்செய்வதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு தகுதியான அதிகாரியை ஒவ்வொரு உரிமதாரரும் நியமிப்பதை ஒழுங்குறுத்துநர் கட்டாயப்படுத்த வேண்டும்.

(ஆ) மின்கட்டணங்களைத் தயாரிக்கும்போதும் கணக்கிடும்போதும், மின் உற்பத்தி, செலுத்துகை, பகிர்ந்தளிப்பு மற்றும் தேசிய முறைமை இயக்குநர் (NSO) ஒழுங்குறுத்துநரால் தீர்மானிக்கப்படவுள்ள மின்கட்டணங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய செலவுகள் தொடர்பான நிதி தகவல்கள் அடங்கலாக அனைத்து தகவல்களையும் பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்ய வேண்டும் என ஒழுங்குறுத்துநர் தேவைப்படுத்த வேண்டும்.

(இ) அத்தகைய அனைத்து செலவுகளும், மின் முறைமையின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, சந்தையில் பெறக்கூடிய மிகக்குறைந்த செலவுகள் என்பதை உரிமம் பெற்றவர்கள் நியாயப்படுத்த வேண்டும்.

(ஈ) அனைத்து புதிய மின் உற்பத்திகளும் திறந்த, வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த கேள்விமனு நடைமுறையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும்.

(உ) 2024 ஆம் ஆண்டின் 2024 ஆம் ஆண்டின் இலங்கை மின்சார சட்டத்தையும் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான) மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதிலும், அதற்கான வழிமுறைகளை வகுத்தமைப்பதிலும், மின் உற்பத்தி,

செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றில் எந்தவொரு முற்றுரிமை (Monopoly) சிலரின் ஆதிக்கம் (Olygopoly) அல்லது உற்பத்தியாளர் கூட்டணி அனுமதிக்கப்படுவதில்லை என்பதையோ அல்லது தொடர்வதையோ ஒழுங்குறுத்துநர் உறுதிசெய்வார்.

(ஊ) இந்தக் கொள்கையின் விதிகளைப் பயன்படுத்தி, மின்கட்டண முறைமை மற்றும் அதன் கணக்கீட்டு படிகள் அடங்கலாக ஒரு விரிவான தகவல் குறிப்பு ஒழுங்குறுத்துகை அமைப்பினால் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது நுகர்வோர் மின்கட்டணங்கள் தொடர்பான பொது கலந்தாய்வுக்கு முன்னதாக பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்யப்படுதலும் வேண்டும்.

(எ) செயல்திறன் அடிப்படையிலான வெகுமதிகள் மற்றும் அபராதங்கள் (rewards and penalities) ஆகியவற்றை உள்ளடக்குவதன் மூலம், செயல்திறன் சார்ந்த ஒழுங்குறுத்துகை நடைமுறைப்படுத்தப்படும்.

**IV. மின்சார விநியோக முறைமைகளினதும் நுகர்வோர் சேவைகளினதும் டிஜிட்டல் மயமாக்கல் துரிதப்படுத் தப்படுதல் வேண்டும்.**

(அ) உரிமம் பெற்றவர்கள் அவர்களின் நடைமுறைகளை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் தானியக்கமாக்குதல் மூலம், அனைத்து செயல்முறைகளிலும் உற்பத்தித்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) கிறிட் ஸ்மார்ட் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான செயல்முறை தானியக்கம் (automation), மின்சார சொத்துக்களைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இணையம் சார்ந்த கருவிகள் (IoT) மற்றும் சொத்துப் பயன்பாட்டின் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் அனுகூலம் ஆகியவற்றை உந்தச்செய்யும் பொருட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட பேரேட்டு (distributed ledger) தொழில்நுட்ப அடிப்படையிலான மாற்ற முடியாத பதிவு பேணுகை மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தும் பொருட்டு NSO வழிகாட்டல் வரைபடத்தை தயாரித்து முன்னோடி கருத்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

(இ) இணையத்தாக்குதல்களில் (Cylper-attacks) இருந்து பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, அனைத்து உரிமம் பெற்றவர்களுக்கும் ஏற்புடையதாகக்கூடிய வகையில், 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம் அடங்கலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க, இணைய பாதுகாப்பு மற்றும் தரவு பாதுகாப்பு நடைமுறைகளை ஒழுங்குபடுத்துநரின் மேற்பார்வையின் கீழ் NSO உருவாக்க வேண்டும்.

(ஈ) தேசிய மின்சார சந்தையைக் கட்டம் கட்டமாக நிலைபெறச்செய்வதைக் கருத்திற் கொண்டு, விரைவாகத் தரவுகள் கிடைப்பதை மேம்படுத்துவதற்கான ஒரு வழிகாட்டல் வரைபடத்தை NSO தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

**V. தேசிய சுற்றாடல் மற்றும் காலநிலை தொடர்பான கொள்கைகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.**

(அ) இந்த தேசிய மின்சாரக் கொள்கையானது அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிய கடப்பாடுகளையும் (commitments) அங்கீகரிக்கின்றது. அத்தகைய கடப்பாடுகள் மின்சக்தி விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னரே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில், இக்கொள்கையின் அடிப்படை கோட்பாடு களுக்கு முரணற்ற வகையில் அவை அமைந்திருத்தல் வேண்டும்.

**VI. எதிர்கால மின்சாரத்துறையின் அபிவிருத்தியின் நிமித்தம் தேவையான காணிகள் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அனுமதி மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறைகளும் சீரமைக்கப்படுதல் வேண்டும்.**

குறிப்பிட்ட தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான தனித்துவமான பண்புகளைக்கொண்ட நிலங்களுக்கான மட்டுப்பாடுகளைக் கருத்திற் கொண்டும், கடந்த காலங்களில் மின் உற்பத்தி பொறித்தொகுதிகள் மற்றும் மின்சார செலுத்துகை சொத்துக்கள் ஆகியவற்றுக்கான இடங்களையும் மார்க்கங்களையும் மாற்றியமையால் ஏற்பட்ட பாரிய நிதி இழப்புகளைக் கருத்திற் கொண்டும், எதிர்கால மின்சார உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கான மூலோபாய இடங்களும் மார்க்கங்களும்

முன்னதாகவே அடையாளப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படும். இத்தகைய வசதிகளை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யவும், சமூக மற்றும் சுற்றாடல் ரீதியில் பாதிப்புகளை குறைக்கவும் மிகவும் பொருத்தமான முறையில் இக்கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(அ) எதிர்கால மின்சாரத் துறை உட்கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் இணைந்த வசதிகள் நிறுவுவதற்கு பொருத்தமான இடங்கள் மற்றும் மார்க்கங்கள் பூர்வாங்க சாத்தியவள ஆய்வுகளின் பின்னர் மூலோபாய ரீதியில் முன்கூட்டியே அடையாளப்படுத்தப்படும். இதன் மூலம் பொதுமக்கள் அத்தகைய இடங்களை அல்லது மார்க்கங்களை பயன்படுத்துவதை தவிர்க்க முடியும் என்பதுடன், உண்மையான நிர்மாண காலப்பகுதியில் இடமாற்றங்கள் மற்றும் சமூக பாதிப்புகள் என்பவற்றை குறைக்க முடியும்.

(ஆ) காற்று மற்றும் சூரிய சக்தி பேட்டைகள் போன்ற பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க சக்தி உட்கட்டமைப்புகளை நிறுவுவதற்கு ஏற்ற மிகச்சிறந்த இடங்கள் முன்கூட்டியே அடையாளங் காணப்பட்டு, ஒரு தலைமைத் திட்டத்தில் குறிக்கப்படும். இதன் மூலம் அவை பெரிய அளவிலான பிரத்யேக வசதிகளாக கட்டம் கட்டமாக மேம்படுத்தப்பட முடியும்.

(இ) தேசிய உட்கட்டமைப்பு திட்டமிடலின் நன்மைக்காகப் பகிரப்பட்ட வழித்தடங்களுக்கு முன்னுரிமை அளித்து, பரிமாற்றம் மற்றும் பிரதான மின்சார பரிமாற்றத்திற்கான வழித்தடங்கள் அடையாளம் காணப்படும். பொதுமக்களுக்கு முன்கூட்டியே தகவல்களை வழங்குவதற்காக அடையாளம் காணப்பட்ட வழித்தடங்கள் வெளியிடப்படும்.

(ஈ) சாத்தியமான இடங்களிலெல்லாம், ஒரே வழித்தடங்களை பயன்படுத்தி பல குழாய்த்தொடர்களையும் மற்றும் மின்சார செலுத்துகை மார்க்கங்களையும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) எதிர்கால நிலக்கீழ் கேபிள் மார்க்கங்கள் மற்றும் குழாய் போக்குவரத்து மார்க்கங்கள் ஆகியவற்றுக்கான இடங்களை சிறந்த முறையில் கண்டறிவதற்கு வசதியாக, மின்சாரம், நீர், தகவல் தொடர்பு, நகர எரிவாயு மற்றும் பெற்றோலியம் என்பன அடங்கலாக தற்போதுள்ள மற்றும் எதிர்கால நிலக்கீழ் பயன்பாட்டு உட்கட்டமைப்புகள் அனைத்தும் ஒரு பொதுவான கட்டாய புவியியல் தகவல் முறைமையில் (GIS) உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) மின்சார விநியோகம், கழிவுநீர் அகற்றல், நீர் வழங்கல், தகவல் தொடர்பு மற்றும் எரிவாயு வழங்கல் அடங்கலாக வீதியோரப் பயன்பாட்டு உட்கட்டமைப்பு மார்க்கங்கள், போக்குவரத்து உட்கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும். இது உரிமையை தெளிவாக பிரித்தறியவும், பராமரிப்பில் நெகிழ்வுத்தன்மையை பேணவும் மற்றும் எதிர்கால விரிவாக்கத்திற்கான இடவசதியை உறுதிசெய்யவும் உதவும் வகையில் அமைதல் வேண்டும்.

(எ) புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் மின்சார செலுத்துகை உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்குப் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெறுவதில் உள்ள சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, அதனை முறைப்படுத்துவதற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை ஒரு பொதுவான தளத்தை உருவாக்க வேண்டும்.

**தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கை**

**வலுசக்தி அமைச்சு**

**இலங்கை அரசாங்கம்**

2026.03.03

இலங்கையில் மின்சாரச் செலவுகளையும் மற்றும் விலைகளையும் நிர்ணயிப்பது தொடர்பான கொள்கை, மூலோபாயங்கள்; மற்றும் செயற்பாடுகளின் கால வரையறைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் வலுசக்தி அமைச்சின் ஆவணம்.

2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, 2026.03.03 இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கை, தேசிய சக்திக் கொள்கையின் ஒரு பகுதியாக தேசிய மின்சாரக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள அரசாங்கக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது.

உள்ளடக்கம்

சுருக்கக்குறியீடுகளின் பட்டியலும் அலகுகளும்........ 14A

1. **அறிமுகம்** ........ **15A**
2. **தேசிய மின்சாரக் கட்டண கொள்கையின் குறிக்கோள்கள்** ........ **18A**
3. **கொள்கைக் கூற்று** ........ **18A**
4. **மூலோபாயங்கள்** ........ **19A**
5. **கொள்கை அமுலாக்கச் சட்டகம்** ........ **21A**

**சுருக்கக்குறியீடுகளின் பட்டியல்**

| | |
|---|---|
| BST | தொகையளவிலான மின்சார விநியோகக் கட்டணம் |
| BSTA | தொகையளவிலான மின்சார விநியோக பரிவர்த்தனை கணக்கு |
| CEB | இலங்கை மின்சார சபை |
| CEBEF | வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார சபை ஊழியர் நிதிய (தனியார்) நிறுவனம் |
| CPI | நுகர்வோர் விலைச் சுட்டி |
| EDL | எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் |
| EGL | எலக்ட்ரிசிட்டி ஜெனெரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் |
| EVL | எனர்ஜி வெஞ்சர்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் |
| IPP | சுயாதீன மின்னுற்பத்தியாளர்கள் |
| LECO | இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் |
| LKR | இலங்கை ரூபா |
| MOE | வலுசக்தி அமைச்சு (முன்னாள் மின் வலுசக்தி அமைச்சு) |
| MOF | நிதி அமைச்சு |
| MOPE | மின் வலுசக்தி அமைச்சு (தற்போதைய வலுசக்தி அமைச்சு) |
| MYT | பல்-ஆண்டு மின்சார கட்டணம் |
| NSO | நேஷனல் சிஸ்டம் ஆபரேட்டர் (பிரைவேட்) லிமிடெட் |
| NTNSP | நேஷனல் ட்ரான்ஸ்மிஷன் நெட்ஒர்க்ஸ் சர்வீசஸ் ப்ரொவைடர் (பிரைவேட்) லிமிடெட் |
| O&M | இயக்கச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு |
| PPA | மின்சக்தி கொள்வனவு ஒப்பந்தம் |
| PSA | மின்சார விற்பனை ஒப்பந்தம் |
| PUCSL | பொது தனியார் பங்காளித்துவம் |
| SLSEA | இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு |
| SPPA | இலங்கை நிலைபெறு சக்தி அதிகார சபை |
| TSA | மின் பரிமாற்ற சேவை ஒப்பந்தம் |
| TOU | பாவனை காலம் |
| UDA | நகர அபிவிருத்தி அதிகார சபை |

**அலகுகள்**

| | |
|---|---|
| kWH | கிலோவோட் மணி |
| MW | மெகாவோட் |
| V | வோல்ட் |
| W | வாட் |

# 1. அறிமுகம்

இந்த தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கை, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டது) தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒழுங்குறுத்துநர் மற்றும் அனைத்து உரிமதாரர்களும் சட்டத்தின்படியும் அதற்கு இணங்கும் முறையிலும் பின்பற்ற வேண்டும். 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 4 (10) (எ) இன் பிரகாரம் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டது), இந்த தேசிய கட்டணக் கொள்கையை செயல்படுத்துவதற்கு வசதியாக அமைச்சர் அவ்வப்போது எழுத்துபூர்வமாக கொள்கை வழிகாட்டுதல்களை வெளியிடலாம்.

## 1.1. பின்னணி

இலங்கை மின்சார சபை (CEB) 1969 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் மின்சார விநியோக தொழில்துறையில் ஆதிக்கம் செலுத்தும் நிறுவனமாக இருந்து வருகின்றது. புதிய மின் உற்பத்தியில் முதலீடு செய்ய தனியார் துறைக்கு வாய்ப்பளிக்கப்படுவதையடுத்து 1696 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை, CEB எல்லா மின்சார உற்பத்தி வசதிகளையும் சொந்தமான கொண்டு இயக்கியது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், CEB நாட்டின் மின் உற்பத்தி கொள்திறனில் 55% ஐ தனதாக்கி கொண்டு 66% சக்தியை வழங்கியது. கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சூரிய சக்தி உற்பத்தி அலகுகள் அடங்கலாக எஞ்சிய மின் உற்பத்தி கொள்திறன் தனியார் துறையினரால் வழங்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு முதல், எண்ணெய் மைய அனல் மின் உற்பத்தியின் (thermal generation) தனியார் முதலீடுகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்ட அதே நேரத்தில் புதுப்பிக்கத்தகு சக்தி மைய மின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு வடிவமைந்த சக்தி திணித்தல் கட்டணங்கள் (feed-in-tariffs) அறிமுக நடவடிக்கையாக முன்வைக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், 29 இ.மி.ச. மின் உற்பத்தி பொறித்தொகுதிகள் (20 புதுப்பிக்கத்தகு, 9 அனல் சக்தி), 346 தனியார் மின் உற்பத்தியாளர்கள் (2 அனல் சக்தி, ஏனையவை புதுப்பிக்கதகு) மற்றும் கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 93,064 சூரிய சக்தி அலகுகள் என்பன இருந்தன.

1969 ஆம் ஆண்டு முதல் CEB மின்சார செலுத்துகையையும் மற்றும் மின்சார முறைமை இயக்கச் செயற்பாடுகளையும் பிரத்தியேகமாக மேற்கொண்டது.

1983 ஆம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சாரத் தனியார் நிறுவனம் (LECO) நிறுவப்பட்டது. இந்த நிறுவனத்தில் திறைசேரி, CEB, நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) ஆகியவை முக்கிய பங்குதாரர்களாகவும், நான்கு உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் சிறுபான்மை பங்குதாரர்களாகவும் உள்ளனர். 2024 ஆம் ஆண்டின் இறுதியில், LECO 631,000 வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கி உள்ளது. இது நாட்டின் மொத்த 7.73 மில்லியன் வாடிக்கையாளர்களில் சுமார் 8% ஆகும். ஏனைய 7.1 மில்லியன் வாடிக்கையாளர்களும் CEB யின் நான்கு விநியோகப் பிரிவுகள் மூலம் சேவையைப் பெற்றுக்கொள்கிறார்கள்; இலங்கையின் விநியோகத்தர்கள் விநியோக வலையமைப்பு மற்றும் விநியோக செயற்பாடுகள் இரண்டையும் மேற்கொள்கிறார்கள்.

இலங்கையின் மின்சார தொழில்துறை செயற்பாடுகள் தனி கொள்வனவாளர் மாதிரியைப் (single buyer model) பின்பற்றுகின்றன. இதன் மூலம் எல்லா மின் உற்பத்தியும் CEB இன் கம்பியற்ற நவீன மின்சார செலுத்துகை பிரிவிற்கு விற்பனை செய்யப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன. இது மூன்று தொழிற்பாடுகளை நிறைவேற்றுகின்றது. அவையாவன (i) தனி கொள்வனவாளர், (ii) தொகையளவிலான மின்சார விநியோகத்தர்கள் மற்றும் (ii) மின்சார முறைமை இயக்குனர்கள்.

2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம், CEB ஐ தனித்தனி நிறுவனங்களாக பிரிப்பதற்கு (unbundling) ஏற்பாடு செய்கின்றது. அந்த நிறுவனங்கள் நிதி ரீதியில் சுயாதீனமாக இருக்க வேண்டும். அவற்றில் நான்கு நிறுவனங்கள் குறித்த சட்டத்தின் அடிப்படையில் ஒழுங்குறுத்துகைக்கு உட்பட்டவையாகும். அந்த நான்கு நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பின்வருமாறு.

(அ) எலக்ட்ரிசிட்டி ஜெனெரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (Electricity Generation Lanka (Private) Limited - EGL);

(ஆ) நேஷனல் ட்ரான்ஸ்மிஷன் நெட்ஒர்க்ஸ் சர்விசஸ் ப்ரொவைடர் (பிரைவேட்) லிமிடெட் (National Transmission Network Service Provider (Private) Limited - NTNSP);

(இ) நேஷனல் சிஸ்டம் ஆபரேட்டர் பிரைவேட் லிமிடெட (National System Operator (Private) Limited - NSO);

(ஈ) எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா பிரைவேட் லிமிடெட் (Electricity Distribution Lanka (Private) Limited (EDL);

### 1.2. 2009 ஆம் ஆண்டின் மின்சார சட்டத்தின் கீழுள்ள பொருளாதார ஒழுக்காற்றுகை

இலங்கை மின்சாரச் சட்டம் 2009 (திருத்தப்பட்ட) CEB இன் செயற்பாடுகள் தனித்தனியாக உரிமம் பெறப்படுதலும், CEB செயற்பாட்டு ரீதியில் பிரிக்கப்படுதலும (functionally unbundled) அத்துடன் ஒரே கூட்டிணைந்த நிறுவனத்திறகுள் அமைந்திருத்தலும் வேண்டும் என்ற ஏற்பாடுகளுக்கு வழிவகுத்தது. அதற்கிணங்க, CEB இற்கு ஆறு உரிமங்கள் வழங்கப்பட்டன. மின் உற்பத்திக்கான உரிமம், மின்சார செலுத்துகைக்கான உரிமம் (மின்சார செலுத்துகை வலையமைப்பையும், தொகையளவான மின்சார விநியோகத்தையும் மற்றும் இயக்கச்செயற்பாட்டு வணிக செயற்பாடுகளையும் உள்ளடக்குவதற்கு) மற்றும் மின்சார பகிர்ந்தளிப்புக்கும் மின்சார விநியோகத்திற்கும் உரிய நான்கு உரிமங்கள் CEB இல் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள நான்கு மின்சார பகிர்ந்தளிப்பு பிரிவுகளுடன் இணைப்பதற்கு). LECO நிறுவனம் CEB இன் மின்சார செலுத்துகை பிரிவிலிருந்தும், மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோக வாடிக்கையாளரிடம் இருந்தும் மின்சாரத்தை கொள்வளவு செய்து தனித்தனி உரிமம் பெற்ற மின்சார விநியோக நிறுவனமாக தொடர்ந்து இயங்கியது.

2009 ஆம் ஆண்டின் இலங்கை மின்சாரச் சட்டம் (திருத்தப்பட்ட) இலங்கையின் மின்சார தொழில்துறையின் பொருளாதார, தொழினுட்ப மற்றும் பாதுகாப்பு ஒழுங்குறுத்துனராக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) அதிகாரத்துவத்தை அளித்தது. ஏனைய தேவைப்பாடுகளுக்கு மத்தியில், PUCSL அங்கீகரித்துள்ள செலவு பிரதிபலிப்பு முறையியலுக்கு (Cost reflevtive methodology) இணங்க, மின்சார செலுத்துகை மற்றும் தொகையளவான மின்சார விநியோக கட்டணங்கள், மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு கட்டணங்கள் என்பன PUCSL இன் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய, PUCSL 2011ஆம் ஆண்டில் மின்சார கட்டண முறையியலை வெளியிட்டது. அதனை அடுத்து 2015[1] மற்றும் 2021[2] ஆம் ஆண்டுகளில் இற்றைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2011 ஆம் ஆண்டின் மின்சார கட்டண முறையில் (அ) ஐந்து ஆண்டு கட்டுப்பாட்டுக் காலத்துடன் கூடிய மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு கட்டணங்களுக்கான பல்-ஆண்டு கட்டண (Multi-Year Tariff - MYT)[3] நிர்ணய நடைமுறையையும் மற்றும் (ஆ) ஆறு மாத கட்டுப்பாட்டுக் காலத்துடன் கூடிய (சனவரி முதல் யூன், யூலை முதல் திசெம்பர் வரை) தொகையளவான மின்சார விநியோக கட்டணங்களையும் தாபித்தது. முந்தைய ஆறு மாத கட்டுப்பாட்டுக் காலத்தில் முன்னறிவிப்புக்கும் உண்மையான தொகையளவான மின்சார விநியோக செலவுகளுக்கும் இடையில் எந்தவொரு பொருந்தாத தன்மையையும் பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்பட்ட ஆறு மாத தொகையளவான மின்சார விநியோக கட்டணங்களை எதிர்வுகூறுவதற்கான (forecast) நடைமுறையை இந்த முறையியல் உறுதி செய்தது. ஒரே மாதிரியான ஒரு தேசிய மின்சார கட்டண கொள்கைளை (policy of uniform national tariffs) செயற்படுத்துவதற்கும் தொகையளவான மின்சார விநியோகக் கட்டணங்களை சீராக்குவதற்கும், எதிர்வுகூறப்பட்ட வாடிக்கையாளர் மின்சார கலவைக்கும் (forecast customer mix) உண்மையான வாடிக்கையாளர் மின்சார கலவைக்கும் இடையில் பொருந்தாத தன்மையால் ஏற்படும் (mismatch) வருமான பற்றாக்குறையை (shortfall) அல்லது மிகையை (surplus) சீராக்குவதற்கும் இந்த முறையியல் நடைமுறையை உறுதி செய்கின்றது.

2011 ஆம் ஆண்டு சனவரி முதல் ஆரம்பமாகும் முதலாவது கட்டுப்பாட்டுக் காலத்திற்கான (control period) மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு ஆகியவற்றுக்கான முதலாவது கட்டணத் தொகுப்பு (tariff filing) பணி 2010 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. 2021 ஆம் ஆண்டு முதல், அதாவது 2011-2020 இன் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளினதும் தலை இரண்டு வட்டங்களின் பின்னர், மின்சார செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு கட்டணங்களுக்கான MYT கட்டுப்பாட்டு காலம் மூன்று ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு ஆகியவற்றுக்கான நான்காவது MYT கட்டுபாட்டுக்காலம் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியதுடன் 2026 ஆம் ஆண்டில் நிறைவுற்றது. மொத்த விநியோக கட்டணங்களுக்கான கட்டுப்பாட்டு காலம் சனவரி 2011 முதல் ஆறு மாதங்களாக இருந்தது, இது 2024 முதல் மூன்று மாதங்களாக (அதாவது காலாண்டு அடிப்படையில்) குறைக்கப்பட்டுள்ளது.

கட்டணத் தாக்கல் மற்றும் தீர்மானத்தின் செயல்முறையை எளிதாக்குவதற்காக, 2016 இல், PUCSL கட்டண நிர்ணயத்திற்கான விதிகளை (Rules of Tariff determination) வெளியிட்டது.[4] முன்னறிவிப்பு உருவாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோக தரவு மற்றும் செலவுகள் மற்றும் உரிமதாரர்களின் தரவு மற்றும் செலவுகளை முன்கூட்டியே தாக்கல் செய்தல் ஆகியவற்றில் உரிமதாரர்களால் கட்டண தாக்கல்கள், PUCSL ஆல் வழங்கப்பட்ட வடிவங்கள் (Format) மற்றும் மாதிரிகள (templates) மூலம் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.3. 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் பொருளாதார ஒழுங்குமுறைக்கான ஏற்பாடுகள்

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நான்கு நிறுவனங்களின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

[1] மின்கட்டண முறைமை நவம்பர் 2015, PUCSL. https://www.pucsl.gov.lk/wp-content/uploads/2018/04/Tariff-Methodology-2015.pdf
[2] மின்கட்டண முறைமை ஜனவரி 2021, PUCSL. https://www.pucsl.gov.lk/wp-content/uploads/2022/06/Tariff-Methodology-amended-Version_2021.pdf
[3] பல ஆண்டு கட்டணமுறை என்பது, ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு சமர்ப்பிக்கும் கோரிக்கையின் அடிப்படையில், பொதுவாக 3 முதல் 5 ஆண்டுகள் வரையிலான பல ஆண்டுகளுக்குப் பொருந்தக்கூடிய கட்டணமுறைகள் குறித்த ஒரு ஒழுங்குமுறை நிர்ணயமாகும்.
[4] மின்சாரக் கட்டணங்களை மதிப்பாய்வு செய்து சரிசெய்வதற்கான நடைமுறை, 2016 ஆம் ஆண்டின் விதி எண். 03, வர்த்தமானி எண். 1978/21 - செவ்வாய், ஆகஸ்ட் 02, 2016.

(அ) எலக்ட்ரிசிட்டி ஜெனெரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (Electricity Generation Lanka (Private) Limited - EGL);

*தொழிற்பாடுகள்: மின்சார உற்பத்தி, CEB இன் அனைத்து சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் செயற்பாடுகளையும் பொறுப்பேற்றல்.*

(ஆ) நேஷனல் ட்ரான்ஸ்மிஷன் நெட்ஒர்க்ஸ் சர்வீசஸ் ப்ரொவைடர் (பிரைவேட்) லிமிடெட் (National Transmission Network Service Provider (Private) Limited - NTNSP);

*தொழிற்பாடுகள்: தேசிய க்ரிட் மின்சார முறைமையின் பௌதீக உட்கட்டமைப்பின் அபிவிருத்தி பராமரிப்பு மற்றும் செயற்பாடு, CEB இன் மின்சார செலுத்துகை அமைப்பின் எல்லா மின்சார செலுத்துகை சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் இயக்கச் செயற்பாடுகள் என்பவற்றை பொறுப்பேற்றல்.*

(இ) நேஷனல் சிஸ்டம் ஆபரேட்டர் (பிரைவேட்) லிமிடெட்; (National Sustem Operator (Private) Limited - NSO);

*தொழிற்பாடுகள்: மின் உற்பத்தி திட்டமிடுகை, மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் பொறுப்பு மற்றும் சிக்கனமான மின்சார அனுப்புகை மற்றும் எதிர்கால மின்சார உற்பத்தியும் மின்சார செலுத்துகை கொள்திறனும் தொடர்பான தொழிற்பாடுகள்*

(ஈ) எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட்; (Electricity Distribution Lanka (Private) Limited - EDL);

*தொழிற்பாடுகள்: மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோகம், CEB இன் நான்கு மின்சார பகிர்ந்தளிப்பு பிரிவுகளில் உள்ள சொத்துகள், பொறுப்புக்கள் மற்றும் இயக்கச் செயற்பாடுகள் என்பவற்றை பொறுப்பேற்றல்.*

நியமிக்கப்படும் திகதியிலிருந்து, ஒவ்வொரு நிறுவனமும் CEB இன் பின்வரும் சொத்துக்களையும் மற்றும் இயக்கச் செயற்பாடுகளையும் பொறுப்பேற்று, சொந்தமாக்கி இயக்கும் :

EGL: மின் உற்பத்தி பொறித்தொகுதிகள் உள்ளடங்கலாக CEB இன் எல்லா மின் உற்பத்தி சொத்துக்களும்
NTNSP: CEB இன் எல்லா மின்சார செலுத்துகை சொத்துக்களும்
NSO: CEB இன் கம்பியற்ற நவீன மின்சார செலுத்துகை மட்டத்திலான இயக்கச் செயற்பாடுகள் (தொகையளவான மின்சார விநியோம் மற்றும் மின்சார முறைமை இயக்கச் செயற்பாடுகள்)
EDL: நான்கு பிரிவுகள் அடங்கலாக CEB இன் எல்லா மின்சார பகிர்ந்தளிப்பு சொத்துக்கள் மற்றும் சில்லறை சேவைகள்

மின்சார சட்டத்தின் அட்டவணை ஐ இல் விவரிக்கப்பட்டுள்ள மின்சார தொழில்துறையின் கட்டமைப்பு அடிப்படையில், 2007 ஆம் அண்டில் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இரண்டு வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனிகள் CEB இன் எஞ்சிய சொத்துக்களையும் மற்றும் செயற்பாடுகளையும் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார சபை ஊழியர் நிதிய (தனியார்) நிறுவனம் (CEB Employees Fund (Private) Limited - CEBEF);

(ஆ) வரையறுக்கப்பட்ட எனர்ஜி வெஞ்சர்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம் (Energy Ventures Lanka (Private) Limited - EVL)

மேற் கூறியவற்றை தவிர, 346 தனியார் மின் உற்பத்தியாளர் (2 அனல் சக்தி, ஏனையவை புதுப்பிக்கத்தகு சக்தி மைய) மற்றும் கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 93,064 சூரிய சக்தி அலகுகள் என்பன செயற்பாட்டில் இருந்தன. (2024 ஆம் ஆண்டின் இறுதியில்) மற்றும் நியமிக்கப்பட்ட திகதிக்குள் செய்து கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தங்களும் தொடர்ந்து செயற்படும்.

LECO அதன் சேவைப் பகுதியில் மின்சார விநியோகஸ்தராகவும் வழங்குநராகவும் இருந்து, அதன் செயற்பாடுகளைத் தொடரும்.

EGL இன் ஒவ்வொரு மின் உற்பத்தி பொறித் தொகுதியும் NSO உடன் மின்சக்தி கொள்வனவு ஒப்பந்தத்தை (PPA) செய்து கொள்ளும் எல்லா தனியார் மின் உற்பத்தியாளர்களும் (10 மெகாவோட் அளவுக்கு அதிகமான மின் உற்பத்தி பொறித் தொகுதிகளுக்கு) மின் சக்தி கொள்வனவு ஒப்பந்தத்தை அல்லது (10 மெகாவோட் வரை புதுப்பிக்கத்தகு சக்தி மைய உற்பத்தி பொறித் தொகுதிகளுக்கு) நியமப்படுத்திய மின் சக்தி கொள்வனவு ஒப்பந்தங்களை (SPPA) செய்துள்ளன. 2009 முதல், CEB மற்றும் LECO ஆகியவை, கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மூரிய சக்தி அலகுகள் தொடர்பாக ஒன்-க்றிட் (on-grid) கூரை மீதான சூரிய ஒளி மின்னழுத்த (photovoltaic - PV)

உற்பத்தி வசதிகளுக்கான ஒப்பந்தங்களை ஏற்கனவே செய்துள்ளது. இந்த ஒப்பந்தங்கள் NSO நிறுவனத்திறகு சாட்டப்படும்.

தொகையளவான மின்சக்தி கொள்வனவுகள், விற்பனை மற்றும் மின்சார முறைமைச் செயற்பாடுகள் என்பவற்றை NSO நிறுவனம் மேற்கொள்ளும். 2024 ஆம் ஆண்டின் மின்சார சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, அது நடைமுறைக்கு வந்தவுடன் திறந்த அணுகலின் சம்பந்தப்படும் மின் பிறபாக்கிகள் தவிர, எல்லா மின் உற்பத்திகளுக்கும் NSO நிறுவனம் தனி கொள்வனவாளராக (single buyer) இருக்கும்.

NSO உடன் மின்சக்தி விற்பனை ஒப்பந்தங்களை (Power Sale Agreements) செய்து கொள்ளும் மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்களுக்கு (EDL மற்றும் LECO ஆகியவற்றின் நான்கு பிரிவுகள்) NSO மின்சாரத்தை விற்பனை செய்யும்;. NTNSP ஒரு மின்சார செலுத்துகை சேவை ஒப்பந்தத்தை (Transmission Service Agreement) NSO நிறுவனத்துடன் செய்து கொள்ளும்.

## 2. தேசிய மின்சாரக் கட்டண கொள்கையின் குறிக்கோள்கள்

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டது) மின்சாரக் கொள்கையின் நோக்கங்கள், கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

1. ஒழுங்குறுத்தப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும் மின்சாரம் மற்றும் தொடர்புடைய சேவைகள் ஆகியவற்றின் விலை நிர்ணயத்தில் நுகர்வோரால் சுமக்கக்கூடிய விலை (Affordability), சமபங்கு (Equity) மற்றும் சமத்துவம் (Equality) என்பவற்றை உறுதி செய்தல்.
2. ஒழுங்குறுத்தப்பட்ட நிறுவனங்களின் முதலீடுகளில் நியாயமான ஒரு வருமானத்தின் பிரத்தியேக நிதிசார் நிலைபெறுதகுதன்மையை உறுதி செய்தல்.
3. கட்டணங்களை நிர்ணயிப்பதில் ஒழுங்குறுத்துனர் பின்பற்ற வேண்டிய கோட்பாடுகளை (principles) முன்வைத்தல்.
4. திறந்த அணுகல் கட்டணங்களை நிர்ணயிப்பதில் உள்ள கொள்கைகளைக் குறிப்பிடுவதற்கும், தேசிய மின்சார சந்தை செயல்பாடுகளைத் தொடங்குவதற்கான அடிப்படை முன்நிபந்தனைகளை வழங்குவதற்கும்,
5. மானியங்கள் (Subsidies) மற்றும் பிற செயற்பாடுகளில் (Cross – subsidies) இருந்து வரும் மானியங்கள் எந்தெந்த கோட்பாடுகளின் அடிப்படையில் வழங்கப்படலாம் என்பதை குறிப்பீடு செய்தல்.
6. மின்சார விநியோக பெறுமான சங்கிலி (Value Chain) முறைமையில் வினைத்திறன் மேம்பாட்டையும் மற்றும் கேள்வி சார் சக்தி வினைத்திறன் மேம்பாட்டையும் ஊக்குவித்தல்.
7. மின்சார விநியோகத்தில் போட்டித்தன்மை வாய்ந்த மின்சார கட்டணங்கள் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றின் ஊடாக நுகர்வோர் திருப்தியை மேம்படுத்தல்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட), ஒரு தேசிய மின்சாரச் சந்தை நிறுவப்பட வேண்டும் என்று விதிக்கிறது. தேசிய மின்சாரச் சந்தையை படிப்படியாக நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பிறகு, மின்சாரச் சந்தை சூழலுக்கு ஏற்றவாறு இந்த தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கை புதுப்பிக்கப்படும்.

## 3. கொள்கைக் கூற்று

மின்சார விநியோக கொள்திறன், மின் சக்தி மற்றும் ஏனைய இணைந்த துணை சேவைகள் என்பவற்றை வழங்குவதற்கான செலவுகள், விலைகள் மற்றும் விலை கட்டமைப்பு என்பன கூட்டாக மின்சார கட்டணங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றன.

1. மின்சாரக் கட்டணங்களால் உள்ளடக்கப்பட்டுள்ள மின்னுற்பத்தி செலவுகள் (Generation costs), போட்டித்தன்மை வாய்ந்த மின்சக்தி கொள்வனவு ஒப்பந்தங்களின் அடிப்படையில் செலவுகள் உள்ள மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் பாதுகாப்பு மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார மின்சார அனுப்புகையை (security-constrained economic dispatch) அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும்.
2. தொகையளவான மின்சார கொள்வனவு கட்டணங்கள், தொகையளவான மின்சார விற்பனை கட்டணங்கள், மின்சார செலுத்துகை கட்டணங்கள், திறந்த அணுகல் கட்டணங்கள், மின்சார பகிர்ந்தளிப்பு கட்டணங்கள் மற்றும் மின்சார விநியோக கட்டணங்கள் என்பன குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்திறன் தகவுதிறன்களை பூர்த்தி செய்கின்ற ஒழுங்குறுத்தப்பட்ட நிறுவனங்களின் நிதி நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்யும் வகையில் பிரதிபலிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

3. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் வகைப்பாடு, கட்டணங்கள் மற்றும் கட்டண விருப்பங்கள் ஏதேனும் இருந்தால், 'தேசிய மின்சார சந்தை' ஆரம்பிக்கும் வரை அனைத்து விநியோக உரிமதாரர்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்.

4. வீடுகளுக்கான லைப்லைன் கட்டணங்கள் (lifeline tariffs) மற்றும் பிற மானிய கட்டணங்கள் (subsidised tariffs) தகுதியுள்ள நுகர்வோரை இலக்காகக் கொண்டிருக்கும். மானியங்களுக்கான நிதியுதவி படிப்படியாக குறுக்கு மானியங்களிலிருந்து அரசாங்கத்தின் நேரடி வரவு செலவு ஒதுக்கீடுகளுக்கு மாற்றப்படும்.

5. மேலே உள்ள கொள்கை கூற்றுகள் (3) மற்றும் (4) இன் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஒவ்வொரு வாடிக்கையாளர் வகைக்கும் செலவு-பிரதிபலிப்பு கட்டணங்கள் (cost-reflective tariffs) பயன்படுத்தப்படும். தகுதியான, மோசமாக பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படும்.

6. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் பொருளாதார நடவடிக்கைகள், செலவு குறைந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திறமையான பயன்பாடு, கேள்வி முகாமைத்துவம் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

7. கட்டண நிர்ணய செயல்முறையின் தனித்துவமான அம்சங்கள் (discrete features) மற்றும் புதுப்பிக்கதகு சக்தி வளங்களின் பருவக்கால தன்மை மற்றும் கனியவள எரிபொருள் விலைகளின் வித்தியாசங்கள் என்பவற்றின் காரணமாக இறுதி பாவனை கட்டணங்களின் ஏற்றத்தாழ்வுகள் சுமூகமாக்கப்படுதல் வேண்டும்.

8. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் போட்டியிடும் பொருளாதாரங்களில் கட்டணங்கள், இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்களுடன் ஒப்பிடப்படும்.

9. உரிமதாரர்கள் (licensees) காலப்போக்கில் சுயநிதி நிறுவனங்களாக (self-financed entitities) நிதி ரீதியாக சாத்தியமானவர்களாக (financially viable) இருப்பதை உறுதிசெய்யும் வகையில் கட்டணங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். நிறுவனங்கள் போதுமான நிதி ஆதாரங்களைக் குவிக்கும் வரை, அத்தியாவசிய முதலீடுகளுக்கு நிதியுதவி பெறுவதற்கு அரசாங்க உத்தரவாதங்கள் வழங்கப்படும்.

4. **மூலோபாயங்கள்**

ஒவ்வொரு கொள்ளை கூற்றுகளுக்கும் மூலோபாயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் அவை தேசிய மின்சார கட்டணக் கொள்கையின் ஒரு பாகமாகும்.

1. மின்சாரக் கட்டணங்களால் உள்ளடக்கப்பட்டுள்ள மின்னுற்பத்தி செலவுகள் (generation costs), போட்டித்தன்மை வாய்ந்த மின்சக்திக் கொள்வனவு ஒப்பந்தங்களின் (power purchase agreement - PPAs) அடிப்படையில் செலவுகள் உள்ள மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் பாதுகாப்பு மட்டுபடுத்தப்பட்ட பொருளாதார மின்சார அனுப்புகையை அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும்.

   1.1. CEB-க்குச் சொந்தமான தற்போதைய மின் உற்பத்தி நிலையங்களுக்குரிய EGL மற்றும் NSO இடையேயான மின் கொள்முதல் ஒப்பந்தங்கள், "நியமிக்கப்பட்ட திகதிக்கு" முன்னர் ஏற்கனவே உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கான விஸ்தரிப்புக்கள் EGL-க்கு மாற்றப்பட்டவை, EGL-க்கு ஒப்படைக்கப்பட்டவை, EGL-ன் உறுதிமொழிகளைப் பூர்த்தி செய்யப் போதுமான கட்டணங்களை உள்ளடக்கியிருக்கும்.

   1.2. கனிய வள எரிபொருட்களில் (fossil fuels) இயங்கும் தற்போதைய எல்லா மின் உற்பத்தி பொறித்தொகுதிகளும் போட்டித்தன்மையுடன் எரிபொருளை கொள்வனவு செய்யவும் மற்றும் வெப்ப விகிதங்கள் (heat rates) தொடர்பான சான்றிதழை பெறவும் வேண்டும்.

   1.3. எல்லா புதிய PPA களின் அல்லது பெற்றுக்கொள்ளப்படும் துணைச் சேவைகளின் (ancillary services) கொள்திறன் அங்கீகரிக்கப்பட்டுள்ள நீண்ட கால மின்னுற்பத்தி அபிவிருத்தி திட்டத்தை (long term power development plan) அனுசரிக்க வேண்டும்.

   1.4. 10 மெகா வோட்டிற்கும் குறைவான புதுப்பிக்கதக்க சக்தி அடிப்படையிலான மின் உற்பத்தி பொறித்தொகுதிகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் விடயம் போட்டிப் பெறுகை நடைமுறைகளுடன்[5] (competitive procurement procedures) முற்போக்கு ரீதியில் ஒருங்கிணைவதாக இருத்தல் வேண்டும்.

   1.5. குறைந்த விலை, புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் நன்மைகள் நீண்ட காலத்திற்கு அனைத்து இறுதி பயனர் நுகர்வோருக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, ஊட்ட-கட்டணங்களின் (feed-in-tariffs)

[5] ஆகஸ்ட் 09, 2019 அன்று பிரசுரிக்கப்பட்ட 2135/61 இலக்கமுடைய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய சக்திக் கொள்கை மற்றும் உத்திகளுடன் இணங்குகிறது.

அடிப்படையில் நடந்துகொண்டிருக்கும் ஒப்பந்தங்களை நீடிப்பது அவற்றின் சிறப்பு நிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1.6. தற்போதுள்ள அனைத்து PPA மற்றும் SPPA, அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப மற்றும் வணிக அளவுருக்களுக்கு இணங்குவதற்காக ஒரு தணிக்கை நடத்தப்படும்.

2. தொகையளவான மின்சார கொள்வனவு கட்டணங்கள் (bulk purchase tariffs) , தொகையளவான மின்சார விற்பனை கட்டணங்கள் (bulk sales tariffs) , மின்சார செலுத்துகை கட்டணங்கள் (transmission tariffs) , திறந்த அணுகல் கட்டணங்கள் (open access tariffs), மின்சார பகிர்ந்தளிப்பு கட்டணங்கள் (distribution tariffs) மற்றும் மின்சார விநியோக கட்டணங்கள் (supply tariffs) என்பன குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்திறன் தகவுதிறன்களை பூர்த்தி செய்கின்ற ஒழுங்குறுத்தப்பட்ட நி-றுவனங்களின் நிதி நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்யும் வகையில் பிரதிபலிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

2.1. NSO இன் மூலமான மின்சார முறைமை செயற்பாடுகள் மற்றும் தொகையளவான மின்சக்தி கொள்வனவுகள் என்பவற்றுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வருமானம் (allowed revenue), செலவைப் பிரதிபலிக்கும் வகையில் இருத்தல் வேண்டும்.

2.2. மின்சார செலுத்துகைக் கட்டணங்கள் செலவுகளைப் பிரதிபலிக்கும்.

2.3. உரிமம் பெற்றவர்கள் மின்சார செலுத்துகையின் செயல்திறன் (transmission performance) தொடர்பில் பொறுப்புக் கூறல் வேண்டும்.

2.4. மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் சில்லறை சேவை கட்டணங்கள் செலவை பிரதிபலிக்கும் வகையில் இருத்தல் வேண்டும் மற்றும் அவை மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரினதும் மின்சார வலையமைப்பிற்கு தனித்தனியாக நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

2.5. உரிமம் பெற்றவர்கள் மின்சார பகிர்ந்தளிப்பு செயல்திறன் (distributiom performance) தொடர்பில் பொறுப்புக் கூறல் வேண்டும்.

2.6. உரிமம் பெற்றவர்கள் சில்லறை சேவை வழங்கலின் வணிக தரம் (commercial quality) தொடர்பில் பொறுப்புக் கூறல் வேண்டும்.

2.7. ஒழுங்குறுத்துனர் மேற்கொள்ளும் எல்லா மதிப்பீடுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட சட்டத்திற்கமைய ஒழுங்குறுத்துகை கணக்குகளின் (audited regulatory accounts) அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. இறுதிப் பயன்பாட்டு வாடிக்கையாளர் வகுதி (end-use customer categorization), மின்சார கட்டணங்கள் மற்றும் கட்டண விருப்பங்கள் ஏதேனும் இருந்தால், 'தேசிய மின்சார சந்தை' ஆரம்பிக்கும் வரை அனைத்து விநியோக உரிமதாரர்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்.

3.1. நாட்டில் எந்தவொரு இடத்திலும் அமைந்துள்ள உரிமம் பெற்றவரின் மின்சார வலையமைபப்புக்கு இணைக்கப்படுகின்ற வாடிக்கையாளர்களுக்கு 'தேசிய மின்சார சந்தை' ஆரம்பிக்கும் வரை ஒழுங்குமுறையான தேசிய கட்டண முறை (Uniform National Tariff - UNT) நடைமுயில் இருத்தல் வேண்டும்.

3.2. எதிர்காலத்தில் திறந்த அணுகலை (open access) அனுமதிப்பதற்கான தயாரிப்பில், நடுத்தர மற்றும் பாரிய அளவான வாடிக்கையாளர்களுக்கான மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு விநியோக வலையமைப்பிற்குரிய திறந்த அணுகல் வரைபடமாக்கப்படல் வேண்டும்.

4. வீடுகளுக்கான லைப்லைன் கட்டணங்கள் (lifeline tariffs) மற்றும் பிற மானிய கட்டணங்கள் தகுதியுள்ள நுகர்வோரை (eligible customers) இலக்காகக் கொண்டிருக்கும். மானியங்களுக்கான நிதியுதவி படிப்படியாக குறுக்கு மானியங்களிலிருந்து அரசாங்கத்தின் நேரடி வரவு செலவு ஒதுக்கீடுகளுக்கு மாற்றப்படும்.

4.1. லைப்லைன் கட்டணங்கள் தகுதியான (deserving) வாடிக்கையாளர்களை நோக்கி முன்னேற்றகரமாக இலக்குக்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.2. வீதிகளிலும் மற்றும் பொது இடங்களிம் மின்விளக்குகளை ஒளிரச்செய்வதற்கான செலவுகள் தொடர்ந்து சமூகமயமாக்கப்படுதல் (socialized) வேண்டும்.[6]

[6] "சமூகமயமாக்கப்பட்டது" என்பது அனைத்து வாடிக்கையாளர்களிடையேயும் ஒரு செலவு அல்லது நன்மையைப் பகிர்ந்தளிப்பதைக் குறிக்கிறது, பொதுவாக மக்கள் தொகையில் பெரும் பகுதியினருக்குப் பொதுவாகப் பயனளிக்கும் ஒரு சேவைக்கு இது பயன்படுத்தப்படுகிறது.

5. மேலே உள்ள கொள்கை கூற்றுகள் (3) மற்றும் (4) இன் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஒவ்வொரு வாடிக்கையாளர் வகைக்கும் செலவு பிர-திபலிப்பு கட்டணங்கள் (cost-reflective tariffs) பயன்படுத்தப்படும். தகுதியான, மோசமாக பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படும்.

5.1. சேவையின் செலவுகளில் வெளிப்படைத்தன்மை (transparency) மேம்படுத்தப்படல் வேண்டும்.

5.2. இறுதி பயன்பாட்டு வாடிக்கையார் விலை கட்டமைப்பு (end-use customer price structure) எளிமைபடுத்தப்படல் வேண்டும் என்பதுடன் முன்னேற்ற ரீதியில் செலவைப் பிரதிபலிக்கும் வகையிலும், தரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் அத்துடன் இலங்கைச் சட்டங்களுக்கு இணங்க சிறந்த சர்வதேச செயன்முறைகளை (international practices) நோக்கி நகரும் வகையிலும் இருத்தல் வேண்டும்.

6. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் பொருளாதார நடவடிக்கைகள், செலவு குறைந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திறமையான பயன்பாடு, கேள்வி முகாமைத்துவம் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

6.1. கேள்வி முகாமைத்துவம் மற்றும் கேள்வி மறுமொழி (demand response) உத்திகள் செயல்படுத்தப்படும்.

6.2. விலை நிர்ணயக் கொள்கையின் (pricing policy) ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு மேம்படுத்தப்படும்.

7. கட்டண நிர்ணய செயல்முறையின் தனித்துவமான அம்சங்கள் (discrete features) மற்றும் புதுப்பிக்கதகு சக்தி வளங்களின் பருவகால தன்மை (seasonality) மற்றும் கனியவள எரிபொருள் விலைகளின் வித்தியாசங்கள் என்பவற்றின் காரணமாக இறுதி பாவனை நுகர்வோர் கட்டணங்களின் ஏற்றத்தாழ்வுகள் சுமூகமாக்கப்படுதல் வேண்டும்.

7.1. மொத்த விநியோக பரிவர்த்தனை கணக்கு (BSTA) என்பது NSO மற்றும் உரிமம் பெற்றவர்களுக்கு (lisensees) இடையேயான நிதி பரிவர்த்தனைகளை நிர்வகிப்பதற்கான வழிமுறையாக இருக்கும், மேலும் மொத்த விநியோக பரிவர்த்தனை (BST) காலங்களுக்கு இடையில் ஏதேனும் பற்றாக்குறையை சரிசெய்ய அல்லது ஏதேனும் மிகையை உறிஞ்சுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தொடங்கும்.

7.2. வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் சிரமத்தையும் நாட்டின் வணிகச் சூழலில் நிச்சயமற்ற தன்மையையும் குறைக்க, இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் அடிக்கடி மாற்றப்படாமல் BSTA நிர்வகிக்கப்படும்.

8. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் (end-user tariffs), தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் போட்டியிடும் பொருளாதாரங்களின் (competing economies) கட்டணங்களுடன் ஒப்பிடப்படும்.

8.1. இலங்கையின் கட்டணங்கள் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடப்படல் வேண்டும்.

8.2. மின்சார விலைகளின் எதிர்கால திசைகள் (future directions) வெளிப்படையாகக் கணக்கிடப்பட்டு வெளி யிடப்படும்.

9. உரிமதாரர்கள் காலப்போக்கில் சுயநிதி நிறுவனங்களாக (self financed entities) நிதி ரீதியாக சாத்தியமானவர்களாக (financially viable) இருப்பதை உறுதி செய்யும் வகையில் கட்டணங்கள் கட்டமைக்கப்பட வேண்டும்.

5. **கொள்கை அமுலாக்கச் சட்டகம்**

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தின் 4 (10) (எ) ஆம் பிரிவிற்கிணங்க, தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையின் (National Tariff Methodology) அமுலாக்கத்தை வசதிப்படுத்துவதற்கு அமைச்சர் காலத்திற்குக் காலம் எழுத்துமூலமான கொள்கை வழிகாட்டுதல்களை வெளியிடலாம். இந்தப் பின்னணியில், பின்வரும் கொள்கை அமுலாக்கக் கட்டமைப்பு, ஒவ்வொரு கொள்கை அறிக்கை மற்றும் அதன் கீழான உபாயமுறைகளின் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு ஒழுங்குறுத்துநர், நேஷனல் சிஸ்டம் ஒப்பரேட்டர் (NSO) மற்றும் ஏனைய உரிமைபெற்றோர்களினால் எடுக்கப்பட வேண்டிய குறிப்பான நடவடிக்கைகளை ஏற்பாடுசெய்கின்றது.

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், இந்தக் கொள்கை அமுலாக்க சட்டகம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஒரு வருடத்திற்குள் தொடர்புடைய நிறுவனங்களால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, பூர்த்திசெய்யப்பட முடியும்.

**5.1. மின்சாரக் கட்டண முறையியலைத் (Tariff Methodology) தயாரிப்பதில் ஒழுங்குறுத்துநரினால் கைக்கொள்ளப்பட வேண்டிய பொதுவான கோட்பாடுகள்**

சட்டம் வெளிப்படையாக "மின்சாரக் கட்டண முறையியலொன்றை" குறிப்பிடவில்லை. இந்தக் கொள்கையானது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒரு மின்சாரக் கட்டண முறையியலின் அவசியத்தை அங்கீகரிக்கிறது.

கட்டண முறையியலானது கொள்கையளவில் இரண்டு முக்கிய கூறுகளை உள்ளடக்குகின்றது (i) ஒவ்வொரு உரிமதாரரின் அனுமதிக்கப்பட்ட வருவாய்களை நிர்ணயித்தல், மொத்த வழங்கல் தீர்வை கட்டணங்கள், மொத்த வழங்கல் செலவு மற்றும் உரிமதாரர்களுக்கு இடையிலான பரிமாற்ற விலைகள் என்பவற்றுக்கான முறையியல் (ii) ஒவ்வொரு இறுதி-பயன்பாட்டு நுகர்வோர் வகைக்கும் (மின்செலுத்துகையால் சேவை செய்யப்படும் நுகர்வோர் உட்பட) வழங்கல் செலவுகளை நிர்ணயித்தல், ஒவ்வொரு வகை மற்றும் துணை வகைக்கான நுகர்வோர் கட்டணங்களின் ஒவ்வொரு கூறுகளின் செலவு மற்றும் விலையைக் கணக்கிடுதல், மானியங்கள் அல்லது குறுக்கு மானியங்களைக் கணக்கிடுதல் மற்றும் உரிமம் பெற்ற நிறுவனங்களின் மொத்த வருமானம் என்பவற்றுக்கான முறையியல்.

கட்டண முறையைத் தயாரிப்பதற்கு, ஒழுங்குறுத்துநர் 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளுடன் சர்வதேச சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இந்த தேசிய தீர்வைக் கட்டணக் கொள்கையின் உபாயமுறைகள்; மற்றும் குறிப்பிட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்த கீழே பட்டியலிடப்பட்டுள்ள பொதுவான கோட்பாடுகளை தீர்வைக் கட்டண முறையியலின் பிரிவு (i) பின்பற்றுதல் வேண்டும், என்பதோடு அந்தந்த பிரிவுகளில் கூறப்பட்டுள்ள குறிப்பிட்ட ஏற்பாடுகளையும் தீர்வைக் கட்டண முறையியலின் பிரிவு (ii) ஐ பின்பற்றுதலும் வேண்டும்.

1. ஒழுங்குறுத்துநர் பல ஆண்டு கட்டண (MYT) காலத்தை தீர்மானித்து, வெளியிடுதல் வேண்டும். இந்தக் காலமானது மின்செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு உரிமதாரர்களுக்கும் தேசிய முறைமை தொழிற்பாட்டாளருக்கும் (NSO) ஒரே மாதிரியாக இருக்கும்.

2. மின்பிறப்பாக்க பொறித்தொகுதிகளின் திறன் மற்றும் சக்தி செலவுகள் அந்தந்த PPA கள் மற்றும் SPPA கள் அல்லது இணைப்பு ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்கும். CEB யிலிருந்து மாற்றப்படும், மின்பிறப்பாக்க பொறித்தொகுதிகளைப் பொறுத்தவரையில் EGL, ஒழுங்குறுத்துநரின் அங்கிகாரத்திற்காக, ஆரம்பத்தில் 3 ஆண்டுகளுக்கு, MYT அடிப்படையில் PPAக்களின் திறன் செலவுகளை தாக்கல் செய்யும்.

3. EGL பிறப்பாக்க பொறித்தொகுதிகளுக்கு ஏற்;படும் திறன் செலவுகள், மாற்றப்பட்ட சொத்துக்கள் மீதான கடன் உறுதிமொழிகள் (முதன்மை மற்றும் வட்டி, ஏதேனும் இருந்தால்), மாற்றப்பட்ட மற்றும் புதிய சொத்துக்களின் நிலையான தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு செலவுகள் மற்றும் புதிய சொத்துக்களின் ஒப்புரவு மீதான வருமானம் (வினைத்திறன் அல்லது நம்பகத்தன்மை மேம்பாட்டிற்கானவை உட்பட), தொழிற்படு மூலதனத்தின் மீதான வட்டி, நிறுவன செலவுகள், காப்புறுதி மற்றும் ஏதேனும் பொருந்தக்கூடிய வரிகளை மீட்டெடுக்கும். CEB இலிருந்து வாரிசு நிறுவனங்களுக்கு மாற்றப்படும் உற்பத்தி சொத்துக்களுக்கு, ஒப்புரவு மீதான வருமானம் ஆண்டுக்கு 2% அல்லது அந்தந்த உற்பத்தி நிலையத்தின் PPA இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புரவு மீதான வருமானம், எது குறைவாக உள்ளதோ அதுவாக இருக்கும்.

4. மின்செலுத்துகை மற்றும் மின்சார பகிர்வு கட்டணங்களில் பின்வரும் அனுமதிக்கப்பட்ட செலவுகள் அடங்கும்: தேய்மானம், வட்டி, தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு, ஏதேனும் பொருந்தக்கூடிய வரிகள், தொழிற்படு மூலதனத்தின் மீதான வட்டி, நிறுவன செலவுகள் (வினைத்திறன் அல்லது நம்பகத்தன்மைக்கான மேம்பாடு உட்பட) மற்றும் காப்புறுதி. CEB இலிருந்து மாற்றப்படும் சொத்துக்களுக்கு ஆண்டுக்கு 2% சொத்துக்களின் மீதான வருமானம் பொருந்தும். புதிய சொத்துக்களுக்கு, ஒப்புரவு மீதான வருமானம் பொருந்தும்.

5. எலக்ட்ரிசிட்டி ஜெனெரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் (EGL), மின்செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு சொத்துக்களின் புதிய சொத்துக்களுக்கு (போட்டி முறையான கொள்முதல் மூலம் NSO ஆல் ஒதுக்கப்பட்டவை தவிர) அனுமதிக்கப்பட்ட ஒப்புரவு மீதான வருமானம், ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் பின்வருவனவற்றை உரிய முறையில் பரிசீலித்து தீர்மானிக்கப்படும்: கடன்: உரிமதாரரின் வணிகத்தின் ஒப்புரவு விகிதம், கடனின் செலவு, ஒப்புரவு செலவு மற்றும் பிற தொடர்புடைய காரணிகள், மற்றும் இறுதி-பயனர் நுகர்வோருக்கு படிப்படியாக குறைந்த தீர்வை கட்டணங்களை வழங்குவதற்கான நாட்டின் நோக்கங்களுக்கு உதவ நுகர்வோர் தீர்வை கட்டணங்களை குறைவாக வைத்திருப்பதற்கான பரந்த நோக்கம்.

6. CEB இலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களின் மீதான 2% வருமானத்தின் போதுமான தன்மை, தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கை அங்கீகரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் கவனமாக வடிவமைக்கப்பட்ட ஆய்வில் ஆராயப்பட வேண்டும். ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு வலுசக்தி அமைச்சருக்கு ஒரு கொள்கை ஆலோசனையை வழங்க வேண்டும், அதன் அடிப்படையில் சொத்துக்களின் மீதான ஒப்புரவு விகிதத்தில் ஏதேனும் திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டு கொள்கை வழிகாட்டியொன்று வழங்கப்படும்.

7. பொருத்தமான இடங்களில் தேய்மானம், நேரடி முறைமையை அடிப்படையாகக் கொண்டு கணிப்படப்பட்டு நியதிச்சட்ட கணக்குகளுக்கு எஞ்சிய பெறுமதி இன்றி அதே ஆயுட்காலம் பயன்படுத்தப்படுகிறது.

8. புதிய சொத்துக்களுக்கு, மின்செலுத்துகை மற்றும் மின்சார பகிர்வு உரிமதாரர்கள் மற்றும் NSO, மின்சாரக் கட்டண நிர்ணய நோக்கத்திற்காக கடன்களில் திருப்பிச் செலுத்த வேண்டிய மூல தொகை தேய்மான விதியை

கணிசமாக மீறும் சூழ்நிலைகளில் துரிதப்படுத்தப்பட்ட தேய்மானத்திற்கு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவிடம் கோரிக்கை வைக்கலாம்.

9. மூலதன மானியங்கள், ஏதேனும் இருந்தால், மற்றும் வேறு எந்த தரப்பினரும் (நுகர்வோர் உட்பட) பணம் செலுத்திய முதலீடுகளுக்கு, எந்தவொரு தேய்மானம், வட்டி அல்லது ஒப்புரவு மீதான வருமானம் வழங்கப்படாது. அத்தகைய சொத்துக்களை மாற்றுவதற்கான மூலதன ஊதியம் வேறு எந்த புதிய முதலீட்டிற்கும் கருதப்படும்.

10. கட்டண நோக்கங்களுக்காக, ஒழுங்குமுறை சொத்து தளத்தை (regulatory asset base) நிர்ணயிப்பதற்கான தெளிவான வழிகாட்டுதல்களை ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு வெளியிடும், மேலும் சேர்க்கப்பட்ட சொத்துக்கள், அகற்றப்பட்ட சொத்துக்கள், கட்டுமானத்தின் போது வட்டிக்கான ஏற்பாடுகள் மற்றும் மாற்று விகித வேறுபாடுகள்.

11. அனுமதிக்கப்பட்ட வட்டி செலவுகள் உரிமதாரர் சமர்ப்பிப்புகளின் அடிப்படையில் இருக்கும், மேலும் கடன் வணிக மூலங்களிலிருந்து வழங்கப்பட்டால், உரிமதாரர் சிறந்த விதிமுறைகளின் கீழ் கடன்களை வாங்கியதில் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு திருப்தி அடைவார். இதற்கான வழிகாட்டுதலை ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு வெளியிடும்.

12. அனுமதிக்கப்பட்ட பிற நிலையான செலவுகள் (காப்பீடு போன்றவை) தாக்கல் செய்யப்பட்ட உண்மை யானவற்றின் அடிப்படையில் இருக்கும். ஒவ்வொரு மின்செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு உரிமதாரரும் ஒரு காப்புறுதி நிதியை நிறுவ வேண்டும். காப்புறுதி நிதியை முகாமைசெய்வதற்கான வழிகாட்டுதல்களை ஒழுங்குறுத்துநர் தயாரிப்பார்.

13. உரிமதாரரின் மிக அண்மைய கணக்காய்வுசெய்யப்பட்ட ஒழுங்குறுத்துகை கணக்குகளின் அடிப்படையில் தொழிற்படுத்தல் மற்றும் முகாமைத்துவ (O&M) செலவுகள் அனுமதிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட தொழிற்படுத்தல் மற்றும் முகாமைத்துவ (O&M) செலவுகள் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (CPI) அதிகரிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட தொழிற்படுத்தல் மற்றும் முகாமைத்துவ (O&M) செலவுகள் மீளபெறப்படமாட்டாது.

14. எதிர்கால முதலீடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தத்தக்கதாக உரிமதாரரினால் சொத்துக்களின் மீதான வருவாய் அல்லது ஒப்புரவு மீதான வருவாய் மூலம் கிடைக்கும் வருமானம், தக்கவைத்துக் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் தக்கவைக்கப்பட்ட தொகைகள் முதலீடு செய்யப்படாவிட்டால், பங்குதாரர் அத்தகைய தொகைகள் இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமா என்பதை முடிவு செய்வார்.

15. ஒவ்வொரு உரிமதாரரும் நிதியாண்டின் இறுதியில் 6 மாதங்களுக்குள் அதன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவிடம் வழங்குவது கட்டாயமாகும்.

16. தீர்வை கட்டணத்தை தாக்கல் செய்யும் போது நடைமுறையில் உள்ள MYT காலத்துடன் பொருந்தக்கூடிய வகையில் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் தீர்வை கட்டண கோவைப்படுத்தல் அமைப்புகள் வழங்கப்படும், மேலும் புதிய கைத்தொழில் கட்டமைப்புடன் இணக்கத்தை உறுதிசெய்ய இற்றைப்படுத்தப்படும்.

17. தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையில் வேறு எந்த ஏற்பாடுகளாலும் உள்ளடக்கப்படாத, தங்கள் கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ள அசாதாரண நிகழ்வுகளால் ஏற்படும் அதாவது இணக்கசபை வழங்கல்கள், இணக்கசபை செலவுகள், நீதித்துறை வழங்கல்கள் மற்றும் உரிமம் பெற்ற வியாபாரம் தொடர்பான சட்ட செலவுகள் போன்றவற்றால் ஏற்பட்ட பண வெளிப்பாய்ச்சல்களுக்கு இழப்பீடு பெற உரிமதாரர் உரிமை கோரலாம், மேலும், கட்டுப்பாட்டில் இல்லாத நிகழ்வுகள் காரணமாக உற்பத்தி பொறித்தொகுதி அல்லது வலுசக்தியை பெறுவதற்காக மேலதிக செலவுகள் ஆயின் அத்தகையவை காப்புறுதியினால் உறுதிப்படுத்தப்பட்டவையல்ல.

NSO மற்றும் ஏனைய உரிமதாரர்கள், இந்த தேசிய மின்சார கட்டணக் கொள்கையுடன் இணைக்கப்பட்ட ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட தீர்வை கட்டண முறையியலைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு உரிமதாரரும் உரிமதாரரின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையிலும், ஒழுங்குறுத்துகை ஆணையரிடமிருந்து அறிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், தாக்கல் செய்யப்பட வேண்டிய நேரத்தின் அடிப்படையிலும் செலவுகளை தாக்கல் செய்ய வேண்டும்.

### 5.2. தேசிய மின்சாரக் கட்டணக் கொள்கையின் மூலோபாயங்களுக்கான அமுலாக்கக் கட்டமைப்பு

1. மின்சாரக் கட்டணங்களில் சேர்க்கப்பட்டுள்ள மின்பிறப்பாக்க செலவுகள், மின் உற்பத்தி பொறித்தொகுகளின் பாதுகாப்பு கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும், இதன் செலவுகள் போட்டித்தன்மையுடன் பெறுகை செய்யப்பட்ட மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களின் அடிப்படையில் இருக்கும்.

1.1. CEB-க்குச் சொந்தமான தற்போதைய மின் உற்பத்தி நிலையங்களுக்குரிய EGL மற்றும் NSO இடையேயான மின் கொள்முதல் ஒப்பந்தங்கள், "நியமிக்கப்பட்ட திகதிக்கு" முன்னர் ஏற்கனவே உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கான விஸ்தரிப்புக்கள் EGL-க்கு மாற்றப்பட்டவை, EGL-க்கு ஒப்படைக்கப்பட்டவை, EGL-ன் உறுதிமொழிகளைப் பூர்த்தி செய்யப் போதுமான கட்டணங்களை உள்ளடக்கியிருக்கும்.

(அ) பாரிய திருத்தியமைத்தல்கள், மேம்படுத்தல்கள், புனரமைப்பு, மீள்மின்சாரம் வழங்குதல், எரிபொருள் மாற்றுதல், வினைத்திறன் மேம்பாடு மற்றும் மின் உற்பத்திபொறி நிலையங்களின் ஆயுட்கால நீடிப்புகள் ஆகியவை தொடர்பிலான முதலீடுகளுக்கு, நீண்டகால வலுசக்தி முறைமை அபிவிருத்தி திட்டத்திற்கு ஏற்ப ஒரு தனியான ஒழுங்குறுத்துகை தாக்கல் செய்யப்பட வேண்டும், மேலும் செயல்படுத்தப்பட்டவுடன், தேய்மானம், வட்டி செலவுகள், தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) செலவுகள் மற்றும் ஒப்புரவு மீதான வருமானம் அத்தகைய முதலீடுகளுக்கு அனுமதிக்கப்படும்.

(ஆ) எந்தவொரு தொழில்நுட்பத்தின் அனைத்து EGL மின் உற்பத்தி நிலையங்களும், நிதி ரீதியாக சாத்தியமான செயல்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் முதலீடுகளை அடையாளம் காண ஒரு கட்டாய வலுசக்தி கணக்காய்வை ஆரம்பிக்க வேண்டும், கணக்காய்வு சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்குதல் வேண்டும். ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய அத்தகைய முதலீடுகள் MYT அல்லது EGL இன் அதிவிசேட தாக்கல் ஆகியவற்றில் சேர்க்கப்படும்.

(இ) EGL இனால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து செலவுகளும் விரிவான நிதிசார் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் காண்புகள் பகிரங்கப்படுத்தப்படும்.

1.2. புதைபடிவ எரிபொருட்களில் தற்போது இயங்கும் அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும் போட்டித்தன்மையுடன் எரிபொருள் பெறுகையை மேற்கொள்ளவேண்டும் என்பதோடு மற்றும் வெப்ப விகிதங்களின் சான்றிதழைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

(அ) EGL இன் அனைத்து தற்போதைய அனல் மின் நிலையங்களும் இந்தக் கொள்கை நடைமுறைக்கு வந்ததிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எரிபொருள் வழங்குநர்களுடன் விலை நிர்ணயம் போட்டித்தன்மையுடன் தீர்மானிக்கப்படுவதை உறுதி செய்து, எரிபொருள் வழங்கல் ஒப்பந்தங்களில் ஈடுபட வேண்டும்.

(ஆ) சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் (IPPs) அனைத்து எரிபொருள் வழங்கல் ஒப்பந்தங்களும் விலையிடல் போட்டித்தன்மையுடன் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இருப்புக்களின் தேவைக்கு வகைகூறுகின்றது என்பது ஒழுங்குறுத்துநரால் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(இ) இந்தக் கொள்கை நடைமுறைக்கு வந்ததிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் அனைத்து அனல் மின் நிலையங்கள் வெப்ப விகிதங்களை ஒரு சுயாதீன தரப்பினரால் சரிபார்ப்பதை ஒழுங்குறுத்துநர் உறுதி செய்வார்.

1.3. பெறுகைசெய்யப்படும் அனைத்து புதிய மின் உற்பத்தி நிலையங்கள் (PPAs) அல்லது துணை சேவைகளின் திறன், அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால வலுசக்தி அபிவிருத்தித் திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும்.

(அ) எந்தவொரு வருடத்திலும் புதிதாக பெறுகைசெய்யப்படும் மின்பிறப்பாக்கத்தின் தனிநபர் மற்றும் கூட்டாண திறன், அந்த ஆண்டிற்கான திறன்களுக்கு வரையறுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தில் (நீண்ட கால வலுசக்தி அபிவிருத்தி திட்டம்) குறிப்பிடப்பட்ட அடிப்படையில் இருத்தல் வேண்டும். எந்த நேரத்திலும் கிடைக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் தொழிற்பாட்டு திறன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திறன் அபிவிருத்திகள் நடந்து வருவதோடு, தேவையின் உண்மையான வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில், NSO புதிய ஒப்பந்தங்களின் திறன் வரையறைகள், ஏதேனும் இருந்தால், NSO அல்லது பகிர்வு உரிமதாரர்களால் போட்டித்தன்மைகொண்ட கேள்விப்பத்திரம் இல்லாமல் செயல்படுத்தப்படலாம். இது 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தில் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டது) குறிப்பிடப்பட்டுள்ள திறன் வரையறைகளுக்கு உட்பட்டது மற்றும் அந்தச் சட்டங்களின்படி வலுசக்தி அமைச்சரால் வெளியிடப்பட்ட எந்தவொரு கொள்கை வழிகாட்டுதல்களுக்கும் உட்பட்டு, காலாண்டு அறிவிப்பை வெளியிடும்.

(ஆ) NSO, காலாண்டு அடிப்படையில், ஒழுங்குமுறை அதிகாரிக்கு தகவலை வழங்குவதோடு; ஒழுங்குமுறை அதிகாரி, விற்பனையாளர்களுக்கு ஏதேனும் நிதி இழப்புகள் இருந்தால், மற்றும்

ஒவ்வொரு வகை அனுப்ப முடியாத மின் உற்பத்தி நிலையத்தின் அமைப்பு உறுதிப்படுத்தல் வழிமுறைகள் மற்றும் எந்தவொரு வகை மின் உற்பத்தி நிலையத்தின் தகுதியற்ற செயல்பாடு காரணமாக, ஒற்றை வாங்குபவராக NSO-க்கு நிதி இழப்புகள்/ மேலதிக செலவுகள் ஏதேனும் இருந்தால், அவற்றை மதிப்பாய்வு செய்து வெளியிடுவார். அத்தகைய தகவல்கள் அடுத்தடுத்த காலங்களில் அனுப்ப முடியாத மின் உற்பத்தி நிலையங்களின் அமைப்பு நிலைத்தன்மையை மேம்படுத்த NSO ஆல் பயன்படுத்தப்படும்.

(இ) மின் கட்டமைப்பின் நிலைத்தன்மையை உறுதி செய்வதன் மூலம் நம்பகமான மின்கட்டமைப்பைப் பராமரிக்கும் NSO நிறுவனத்தின் பொறுப்பானது தற்போதுள்ள ஒப்பந்தங்களின் விதிமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு உட்பட்டு,நுகர்வோர் - உற்பத்தியாளர்களுடன் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) NSO-வால் அழைக்கப்பட்ட திறந்த போட்டித்தன்மைகொண்ட கேள்விப்பத்திரங்கள் நிலையான மற்றும் மாறுபடத்தக்க செலவுகளில் இரண்டு பகுதிகளாக அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட மின்சாரக் கட்டணப் பிரேரணையுடன் அனைத்து வெப்ப மின் நிலையங்களுக்கும் புதிய PPA-க்களை பெறுகைசெய்வதற்கான அடிப்படையாக இருக்கும்.

1.4. 10 மெகாவாட்டிற்கும் குறைவான புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியை பெறுகை செய்வது, போட்டித்தன்மைகொண்ட பெறுகை நடைமுறைகளுடன் படிப்படியாக இணங்கிச்செல்லும்.

(அ) இலங்கையின் சூழலில், கடந்த காலத்தில் முதலீட்டாளர்களுக்கு மின்சார நுகர்வோர் செலுத்திய ஊக்கத்தொகையின் விளைவாக. சிறிய நீர்மின்சார, சூரியகல PV மற்றும் காற்றாலை மின்சாரம் ஆகியவை முதிர்ந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களின் நிலையை அடைந்துள்ளன என்பதை இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது. பயோமாஸ் மற்றும் கழிவுகளிலிருந்து மின்சக்தி வரை போன்ற பிற தொழில்நுட்பங்களுக்கு தொடர்ச்சியான ஊக்கத்தொகைகள் தேவைப்படலாம் என்பதோடு, அவ்வப்போது மீளாய்வு செய்யப்படலாம்.

(ஆ) தொழில்நுட்பம் சார்ந்த குறைந்த திறன் வரையறைகளைக் குறிப்பிடும் நோக்கில், முதிர்ந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களின் போட்டியற்ற பெறுகைகளுக்கான 10 மெகாவாட் திறன் வலுசக்தி அமைச்சர் மீளாய்வு செய்வார்.

(இ) ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் செலவு-பிரதிபலிப்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்க வேண்டும், மேலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது திருத்தப்பட வேண்டும். ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு FIT ஐ மதிப்பிடுவதற்கான வழிமுறையை விளக்கும் தொழில்நுட்பக் குறிப்பைத் தயாரித்து, இந்தக் கொள்கை அங்கீகரிக்கப்பட்ட 6 மாதங்களுக்குள் வலுசக்தி அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) கூரைமேல் சூரியசக்தி PV இணைப்பு மற்றும் SPPA களுக்கான ஒப்பந்தங்களின் காலம் முதிர்ந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களுக்கு 12 ஆண்டுகளை விஞ்சாமல் இருக்க வேண்டும் மற்றும் வேறு எந்த தொழில்நுட்பத்திற்கும் 20 ஆண்டுகளை விஞ்சாமல் இருக்க வேண்டும். SPPA காலத்தை விட அதிகமான பொறித்தொகுதி ஆயுட்காலம் கொண்ட தொழில்நுட்பங்களுக்கு, ஊட்ட- தீர்வை கட்டணங்களைக் கணக்கிடுவதற்கான மீட்பு மதிப்பு, பொறித்தொகுதி பொருளாதார ஆயுட்காலத்தின் மீது நேரியல் தேய்மானத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(உ) கூரைமேல் சூரியசக்தி PV அலகுகளால் வழங்கப்படும் திறன் மற்றும் ஆற்றலின் அர்த்தமுள்ள அளவீடு மற்றும் முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்காக, இந்தக் கொள்கை அமலுக்கு வந்த திகதியிலிருந்து, இணைப்பு கூரைமேல் சூரியசக்தி PV உற்பத்தி வசதிகளுக்கான அனைத்து புதிய ஒப்பந்தங்களும் “தேறிய மிகை" அடிப்படையில் இருக்கும். தற்போதுள்ள இணைப்பு சூரியசக்தி PV உற்பத்தி வசதிகளுக்கான எந்தவொரு நீடிப்புகளும் ஏதேனும் இருந்தால், அவை "தேறிய மிகை" அடிப்படையிலும் இருக்கும். அத்தகைய அனைத்து வசதிகளும் பகிர்ந்தளிப்பு உரிமதாரர்களால்

தொலைதூரத்தில் அணுகக்கூடிய ஸ்மார்ட் மீட்டர்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். இது இந்தக் கொள்கை அமுலாக்க சட்டகம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து பொருந்தும். இணைப்பு குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்ட தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளை மீறக்கூடிய கூரைமேல் சூரிய சக்தி PV நிறுவல்கள் அனுமதிக்கப்படாது.

(ஊ) போட்டித்தன்மைகொண்ட மின்சாரக் கட்டணங்களில் கூரைமேல் சூரியசக்தி PV மற்றும் பிற முதிர்ந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களை வாங்குவதற்கு, NSO ஆல் பகிர்ந்தளிப்பு உரிமதாரர்களுடன் இணைந்து, கூட்டு அல்லது சமூக வலுசக்தி கூட்டுறவுகள் போன்ற புதிய வணிக மாதிரிகள் மூலம் ஒரு முன்னோடி போட்டித்தன்மை கொண்ட செயல்முறை செயல்படுத்தப்படும். முதிர்ந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்களுக்கான தற்போதைய ஒப்பந்தங்களை நீட்டிப்பதற்கான ஊட்ட-கட்டணங்களுக்கான சந்தை விலை கண்டுபிடிப்பு வழிமுறையாக இந்த செயல்முறை நீட்டிக்கப்படும்.

(எ) அந்தந்த பகிர்ந்தளிப்பு உரிமதாரரால் தீர்மானிக்கப்பட்டபடி, குறைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அடிப்படையிலான உற்பத்தி வசதியை மின்கலத்தை மீள்சக்தியூட்ட செய்ய பயன்படுத்த அனுமதிக்கப்படும். மின்கலசக்தி சேமிப்பு அமைப்புகளுக்கான கட்டணங்கள் மற்றும் தொடர்புடைய ஒப்பந்த நிபந்தனைகள், முதன்மை சக்தி மூலமாக சூரியசக்தி PV உற்பத்தி அலகுகளிலிருந்து மின்ஏற்றம் செய்வதையும், பிற முதன்மை சக்திமூலங்களிலிருந்து மின்ஏற்றம் செய்வதையும் ஊக்குவிக்கும். இந்தக் கொள்கையில் வழங்கப்பட்டுள்ளபடி செலவு-பிரதிபலிப்பு TOU கட்டணத்தின் அடிப்படையில் மின்ஏற்றம் செய்யப்பட்டால், பகிர்ந்தளிப்பு உரிமதாரரின் வலைப்பின்லைப் பயன்படுத்தி மின்கலங்களை மின்ஏற்றம்செய்ய அனுமதிக்கப்படும். பகிர்ந்தளிப்பு உரிமதாரர்களால் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டிய அத்தகைய வளங்களின் திறன் வரையறைகளை NSO அறிவிக்கும். இந்தக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டு, பொருந்தக்கூடிய கட்டணம் மூன்று மாதங்களுக்குள் அறிவிக்கப்படும். இந்தக் கட்டணத்தை செயல்படுத்துவதில் ஏற்படும் ஏதேனும் தாமதங்களால் ஏற்படும் எந்தவொரு பொருளாதார இழப்புகளும் தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும். அனைத்து வகைகள் மற்றும் வகுதி வாடிக்கையாளர்கள் மற்றும் விளம்பரதாரர்களுக்கான நிலையான கட்டணங்கள் மற்றும் வலுசக்தி கட்டணங்கள் ஒவ்வொரு பயன்பாட்டு நேர (TOU) இடைவெளியிலும் பகிர்ந்தளிப்புச் செலவுகளுடன் முழுமையாக இணங்கிச்செல்வதால், விசேட வரையறைகள் மற்றும் ஒப்பந்த நியதி, நிபந்தனைகளின் தேவையில்லை.

1.5. குறைந்த விலை புதுப்பிக்கத்தக்க சக்தியின் நன்மைகள் நீண்ட காலத்திற்கு அனைத்து இறுதி பயனர் நுகர்வோருக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, ஃபீட்-இன்-கட்டணங்களின் அடிப்படையில் இடம்பெற்றுவரும் ஒப்பந்தங்களின் நீடிப்பு, அவற்றின் விசேட தன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(அ) மூன்று அடுக்கு மின்சாரக் கட்டணம் பொருந்தக்கூடிய ஒப்பந்தங்களின் விடயத்தில், ஊட்ட மின்சாரக் கட்டணங்களின் மீதான SPPA க்களின் நீடிப்பு, அத்தகைய SPPA காலத்தின் கடைசி ஆண்டில் நிலவும் மின்சாரக் கட்டணமாக இருக்கும். இதில் O&M செலவுகளுக்காக வழங்கப்பட்ட வருடாந்த அதிகரிப்புகளும் அடங்கும். NSO அத்தகைய தகவலை ஒழுங்குறுத்துநர்க்கு அறிவிக்கும்.

(ஆ) ஊட்ட மின்சாரக் கட்டணங்களில் இணைப்பு மீதான கூரைமேல் சூரியசக்தி PV உருவாக்கும் வசதிகளுக்கான ஒப்பந்தங்களின் நீடிப்பு, சூரியசக்தி PV இலிருந்து உற்பத்தி செய்வதற்காக NSO அறிவித்த சந்தை விலையின் அடிப்படையில் இருக்கும். NSO அத்தகைய தகவலை ஒழுங்குறுத்துநர்க்கு அறிவிக்கும்.

(இ) ஒவ்வொரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வளத்திலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு NSO அறிவித்த சந்தை விலையின் அடிப்படையில் மற்ற அனைத்து SPPAக்களின் நீடிப்பும் இருக்கும். NSO அத்தகைய தகவலை ஒழுங்குறுத்துநர்க்கு அறிவிக்கும்.

(ஈ) தொழிநுட்பத்தின் அடிப்படையில் NSO இனால் நீடிப்புக்காலம் தீர்மானிக்கப்படும். NSO அத்தகைய தகவலை ஒழுங்குறுத்துநருக்கு தெரியப்படுத்தவேண்டும்.

1.6. தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அளவீடுகளுடன் இணங்குவதற்காக தற்போதுள்ள அனைத்து PPA, SPPA களிலும் கணக்காய்வு நடத்தப்பட வேண்டும்.

(அ) 5 மெகாவாட் அல்லது அதற்கு மேற்பட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்கள் மீதான SPPA-க்கள் உட்பட, முதன்மையாக மின் உற்பத்தி நிலையத்தின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகள் தொடர்பான இரு தரப்பினரின் கடமைகள் எந்த அளவிற்கு

இணங்கியுள்ளன என்பதை சரிபார்க்க, செயற்பாட்டில் உள்ள அனைத்து PPA-களிலும் ஒரு கணக்காய்வு நடத்தப்பட வேண்டும்.

(ஆ) தற்போதுள்ள PPA-களில் ஏதேனும் நியாயமற்ற விதிமுறைகள் இருந்தால், தேசிய பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் வகையில் அத்தகைய விதிமுறைகளைத் திருத்துவதற்கு ஒழுங்குறுத்துநர் NSO-க்கும் உரிமதாரருக்கும் இடையே மீளப்பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி எளிதாக்க வேண்டும்.

2. மொத்தக் கொள்முதல் தீர்வைக்; கட்டணங்கள், மொத்த விற்பனை தீர்வைக் கட்டணங்கள், மின்செலுத்துகை தீர்வைக் கட்டணங்கள், திறந்த அணுகல் தீர்வைக் கட்டணங்கள், பகிர்ந்தளிப்பு தீர்வைக் கட்டணங்கள் மற்றும் வழங்கல் தீர்வைக் கட்டணங்கள் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களின் நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக செலவு பிரதிபலிப்பதாக இருக்கும், அது அத்தகைய நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட செயல்திறன் அளவுகோல்களை பூர்த்தி செய்தலக்கு உட்பட்டதாக இருக்கும்.

2.1. NSO-வால் முறைமை தொழிற்பாடுகள் மற்றும் மொத்த மின் கொள்வனவுகளுக்கான அனுமதிக்கப்பட்ட வருவாய் செலவு பிரதிபலிப்பதாக இருக்கும்.

(அ) முறைமை தொழிற்பாடுகளுக்கான அனுமதிக்கப்பட்ட வருவாய் சொத்துக்களின் தேய்மானம், வட்டி செலவுகள் மற்றும் பணியாளர்கள் மற்றும் பராமரிப்பு செலவுகள் உள்ளிட்ட நிலையான செலவுகளை மட்டுமே உள்ளடக்கும்.

(ஆ) மொத்த மின் கொள்வனவு செலவு சமர்ப்பிப்பைத் தயாரிப்பதில், எதிர்வுகூறல் கேள்வியை பூர்த்தி செய்ய மின் உற்பத்தி நிலையங்களின் அனுப்புதல் மாதிரியாக்கத்தை நடத்துவதில் NSO சர்வதேச சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தும், பல பயனர்களுக்கு சேவை செய்ய நீர் மின் வசதிகளை இயக்குதல், பிற புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் மற்றும் சேமிப்பு வசதிகளிலிருந்து பங்களிப்பை மாதிரியாக்குதல்.

(இ) மாதிரியாக்கத்தின் தரவு மற்றும் முடிவுகள் ஒழுங்குறுத்துநர்க்கு வழங்கப்பட வேண்டும் மற்றும் சுயாதீன மதிப்பீட்டை செயல்படுத்த போதுமானளவு விரிவாக பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும்.

2.2. மின்சார செலுத்துகைக் கட்டணங்கள் செலவுகளைப் பிரதிபலிக்கும்.

(அ) மின்செலுத்துகை மின்னழுத்தங்களில் சேவை செய்யப்படும் இறுதி-பயன்பாட்டு நுகர்வோருக்கான தீர்வைக் கட்டணங்கள் செலவு பிரதிபலிக்கும். அத்தகைய நுகர்வோருக்கு NSO சேவை வழங்குநராக இருக்கும். ஒப்பந்த தேவைக்கான கட்டணங்கள், அளவிடப்பட்ட அதிகபட்ச தேவைக்கான கட்டணங்கள், சக்திக்கான பயன்பாட்டு நேர விலை நிர்ணயம், எதிர்வினை மின்சாரம் அல்லது சேமிப்பு உள்ளிட்ட துணை சேவைகளின் பயன்பாடு அல்லது பகிர்ந்தளிப்பும் மற்றும் சில்லறை சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய செலவு பிரதிபலிப்பு தீர்வைக் கட்டணத்தை ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு தீர்மானிக்கும். தற்போதுள்ள மின்மாற்ற நுகர்வோர் முழுவதும் NSO ஆல் நடத்தப்படுகின்ற சுமை ஆராய்ச்சி ஆய்வு, மின்மாற்ற நுகர்வோருக்கான தீர்வைக் கட்டணத்தின் அடிப்படையாக இருக்கும்.

2.3. உரிமதாரர்கள் மின்மாற்ற செயல்திறனுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

(அ) தரம் மற்றும் தொடர்ச்சி விதிகளை முழுமையாக செயல்படுத்துவதற்காக, திருத்தப்பட்ட காலக்கெடுவுடன், 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டது) கீழ், ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு மின்சாரத்தை (2016 ஆம் ஆண்டின் மின்மாற்ற செயல்திறன் தரநிலைகள் விதிமுறைகள்) மீண்டும் வெளியிட வேண்டும்.

(ஆ) மின்மாற்ற அனுமதிக்கப்பட்ட வருவாய்கள், விதிமுறைகளில் உள்ள விதிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யாவிட்டால், உரிமதாரர்கள் செயல்திறனை மேம்படுத்த ஊக்குவிக்கப்படும் வகையில் சீர்செய்யப்படும்.

(இ) மின்மாற்ற இழப்பு இலக்கு இடைக்கால நடவடிக்கையாக 3.5% ஆற்றலாக நிர்ணயிக்கப்படும். NSO மற்றும் மின்செலுத்துகை உரிமதாரர்கள் ஒழுங்குறுத்துநர்க்கு வழங்கும் தரவுகளின் அடிப்படையில், 2027 முதல் அமுலுக்கு வரும் அனுமதிக்கப்பட்ட இழப்புகளை ஒழுங்குறுத்துநர் ஆய்வு செய்து தீர்மானிக்க வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு ஆண்டும் மின்செலுத்துகை இழப்பு இலக்குக்கும் உண்மையான மின்செலுத்துகை இழப்புகளுக்கும் இடையிலான ஒப்பீட்டை ஒழுங்குறுத்துநர் வெளியிட வேண்டும்.

(உ) உற்பத்தி உரிமதாரர்கள், மின்செலுத்துகை உரிமதாரர்கள் மற்றும் NSO ஒத்துழைத்து, மறுசீரமைக் கப்பட்ட மின்சார அமைப்பின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக உற்பத்தி/மின்செலுத்துகை எல்லைகளில் மின் ஓட்டங்களை மதிப்பிட அல்லது அளவிட மின்மாணிவாசிப்பு உள்கட்டமைப்பு அல்லது பிற கருவிகள் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

2.4. பகிர்ந்தளிப்பும் மற்றும் சில்லறை சேவை தீர்வை கட்டணங்கள் செலவு-பிரதிபலிப்பு கொண்டவை மற்றும் ஒவ்வொரு பகிர்ந்தளிப்பு உரிமதாரரின் வலையமைப்பிற்கும் தனித்தனியாக தீர்மானிக்கப்படும்.

(அ) குறிப்பிட்ட சொத்துக்கள் அல்லது நுகர்வோருக்கு (ஒரு கூட்டாட்சி ஆதனம் போன்றவை) தமது வரையறுக்கப்பட்ட வணிகத்தின் குறிப்பிட்ட தன்மை காரணமாக பகிர்ந்தளிப்பு உரிமத்தை வைத்திருக்க வேண்டிய தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட சேவை வழங்குநர்களுக்கு, சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட இடம் சார்ந்த தகவலைப் பயன்படுத்தி, ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு தீர்வைக் கட்டணத்தை நிர்ணயிக்கும்.

(ஆ) வாகன மின்ஏற்றல் அல்லது ஒத்த சேவைகளுக்கு மின்சாரம் மிள்விற்பனையாளர்களுக்கு பகிர்ந்தளிப்பு உரிமதாரர்களால் விற்பனை செய்வதற்கான கட்டணங்கள் செலவை பிரதிபலிக்கும். நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நியாயத்தை உறுதி செய்வதற்காக, அத்தகைய சேவை வழங்குநர்களால் வழங்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படும், அத்தகைய சேவை வழங்குநர்களின் மீள்விற்பனை தீர்வைக் கட்டணத்தை தமது வாடிக்கையாளர்களுக்கு ஆய்வு செய்து வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு முன்னெடுக்கும்.

2.5. பகிர்ந்தளிப்பு செயல்திறனுக்கு உரிமதாரர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

(அ) தரம் மற்றும் தொடர்ச்சி விதிகளை முழுமையாக செயல்படுத்த 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டது) இலங்கை மின்சாரச் சட்டம் 36 இன் கீழ், ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு மின்சாரம் (பகிர்ந்தளிப்பும்) செயல்திறன் விதிமுறைகள் 2016 ஐ மீண்டும் வெளியிடும்.

(ஆ) மின்சாரத் தரம் மற்றும் தொடர்ச்சியான செயல்திறன், விதிமுறைகளில் உள்ள விதிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யாவிட்டால், உரிமதாரர்கள் செயல்திறனை மேம்படுத்த ஊக்கமளிக்கும் வகையில், விநியோகிக்க அனுமதிக்கப்பட்ட வருவாய்கள் (distribution allowed revenues) நியாயமான முறையில் சீர்செய்யப்பட வேண்டும்.

(இ) அனுமதிக்கப்பட்ட பகிர்ந்தளிப்பு இழப்பு, ஒவ்வொரு பகிர்ந்தளிப்பு உரிமதாரரும் நடத்தும் ஆய்வின் அடிப்படையில், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக, வலையமைப்பின் அளவு, நுகர்வோர் அடர்த்தி மற்றும் பகிரப்பட்ட உற்பத்தியின் வளர்ந்து வரும் பங்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

(ஈ) இழப்பு இலக்கை விட அதிகமாக இழக்கப்படும் சக்தியின் பெறுமதி, பகிர்ந்தளிப்பு உரிமதாரரால் ஏற்கப்படும். இதேபோல், உண்மையான இழப்புகள் இலக்கை விடக் குறைவாக இருக்கும்போது பெறப்பட்ட சக்தியின் பெறுமதி, அத்தகைய அளவுகள் மீண்டும் கணக்கிடப்படாது. ஒவ்வொரு பகிர்ந்தளிப்பு உரிமதாரருக்கும் ஒவ்வொரு ஆண்டும், பகிர்ந்தளிப்பு இழப்பு இலக்குக்கும் உண்மையான பகிர்ந்தளிப்பு இழப்புகளுக்கும் இடையிலான ஒப்பீட்டை ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு வெளியிடும்.

2.6. சில்லறை சேவை வழங்கலின் வணிகத் தரத்திற்கு உரிமதாரர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

(அ) புதிய சேவை இணைப்புகளுக்கான காலம், மேலதிக சேவைகள், சில்லறை சேவை வழங்கல் குறித்த நுகர்வோர் முறைப்பாடுகளுக்கான பதில் உள்ளிட்ட சில்லறை சேவை மற்றும் வர்த்தக தர குறிகாட்டிகள், ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டு ஒவ்வொரு உரிமதாரராலும் வெளியிடப்படும்.

(ஆ) ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு, ஒவ்வொரு உரிமதாரரின் வலையமைப்பின் அளவு, புவியியல் பரப்பளவு மற்றும் பிற அம்சங்களின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டு, பிராந்தியத்தில் உள்ள ஒத்த பயன்பாடுகளுக்கு எதிராக தரப்படுத்தப்படும் சேவையின் வர்த்தகத் தரத்தின் குறிகாட்டிகளை வெளியிட வேண்டும்.

2.7. ஒழுங்குறுத்துநரினால் கணக்காய்வு செய்யப்பட்ட ஒழுங்குறுத்துகை கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட அனைத்து மதிப்பீடுகளும சட்டத்திற்கு அமைவானதாக தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(அ) கட்டணத் தாக்கல் செய்த பிறகு, எந்த நேரத்திலும் வலுசக்தி அமைச்சர், கணக்காய்வாளர் தலைமை அதிபதியை (அல்லது, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு புகழ்பெற்ற தனியார் கணக்காய்வு நிறுவனமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்தில் இது நடைமுறைக்கு மாறானதாக இல்லாவிட்டால்) தீர்வை கட்டணத் தாக்கல் செய்வதில் உள்ள புள்ளிவிவரங்களைச் சரிபார்க்க ஒரு விசேட கணக்காய்வுயை நடாத்த அங்கீகரிக்கலாம் மற்றும் கோரலாம். அத்தகைய தீர்வை கட்டணத் தாக்கல் செய்யும் அனைத்து உரிமதாரர்களும், தீர்வை கட்டண நிர்ணய நோக்கத்திற்காக ஒழுங்குறுத்துகை ஆணையாளருக்கு விசேட கணக்காய்வின் முடிவைக் கிடைக்கச் செய்ய, தேவையான அனைத்து தகவல்களையும் விரைவாகக் கிடைக்கச் செய்ய கடமைப்பட்டுள்ளனர்.

3. இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் வகைப்பாடு, கட்டணங்கள் மற்றும் கட்டண விருப்பங்கள் ஏதேனும் இருந்தால், “தேசிய மின்சார சந்தை” ஆரம்பிக்கும் வரை அனைத்து விநியோக உரிமதாரர்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்.

3.1. நாட்டில் எந்தவொரு இடத்திலும் அமைந்துள்ள உரிமம் பெற்றவரின் மின்சார வலையமைப்புக்கு இணைக்கப்படுகின்ற வாடிக்கையாளர்களுக்கு ‘தேசிய மின்சார சந்தை’ ஆரம்பிக்கும் வரை ஒழுங்கு முறையான சீரான தேசிய கட்டண முறை (Uniform National Tariff - UNT) நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(அ) திறந்த அணுகல் மூலம் வலையமைப்பு முழுவதும் மின்சாரத்தை (wheeling of power) இயக்கும் வரை, எந்த பகிர்ந்தளிப்பு உரிமதாரர் அவர்களுக்கு சேவை செய்கிறார் என்பதைப் பொருட்படுத்தாமல் அனைத்து நுகர்வோருக்கும் ஒரே தீர்வைக் கட்டண அமைப்பில் கட்டணம் விதிக்கப்படும்.

(ஆ) அத்தகைய விதிமுறைகள் வெளியிடப்பட்ட பிறகு திறந்த அணுகல் வாடிக்கையாளர்களைத் தவிர, உரிமம் பெற்ற சேவை வழங்குநரைப் பொருட்படுத்தாமல் மற்ற அனைவரும் அதே UNT-யில் தொடர்ந்து பணம் செலுத்த வேண்டும்.

(இ) திறந்த அணுகல் விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான தயாரிப்பில், அனைத்து நுகர்வோருக்கும் (உயிர்வாழ்க்கை நுகர்வோர் தவிர) மின்சாரத்தின் விலை படிப்படியாக அந்த நுகர்வோர் வகை மற்றும் துணை வகைக்கு[7] குறிப்பாக கணக்கிடப்பட்ட பகிர்ந்தளிப்பு செலவில் +/- 15% க்குள் வருவதை ஒழுங்குறுத்துநர் உறுதி செய்வார்.

3.2. எதிர்காலத்தில் பின்வரும் திறந்த அணுகல்களுக்கான ஆயத்தத்தில் நடுத்தரளவான மற்றும் பாரியளவான நுகர்வோருக்கான மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு வலையமைப்புகளுக்கான திறந்த அணுகல் திட்டமிடப்படுதல் வேண்டும்.

(அ) திறந்த அணுகலின் திகதியின் அமுலாக்கல் தொடர்பான ஒரு கொள்கை முடிவை எடுப்பதற்கு வசதியளிக்கும் வகையில், திறந்த அணுகல் கட்டணங்களின் கணிப்பீடும் மற்றும் சாத்தியமான திறந்த அணுகல் விநியோகத்தர்களும் மற்றும் நுகர்வோர்களும் தொடர்பான ஒரு கணக்கெடுப்பும் அடங்கிய ஒரு அறிக்கையை ஒழுங்குறுத்துநர், 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தில் (திருத்தப்பட்டவாறான) எடுத்துரைக்கப்பட்டுள்ளவாறு இந்த கொள்கை அங்கீகரிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், அமைச்சருக்கு வழங்க வேண்டும். அந்த அறிக்கையில் திறந்த அணுகல் கட்டணங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும். ஆனாலும் மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு கட்டணங்கள், மின்சார செலுத்துகை மற்றும்

[7] வாடிக்கையாளர் வகை என்பது பயன்பாட்டு நோக்கத்தைக் குறிக்கிறது (உள்நாட்டு, பொது நோக்கம், தொழில் போன்றவை), துணை வகை என்பது தொகுதி கட்டணங்கள், விநியோக மின்னழுத்தம் மற்றும் ஒரு வகையின் ஒத்த துணைப்பிரிவுகளில் வாடிக்கையாளரின் நிலையைக் குறிக்கிறது.

மின்சார பகிர்ந்தளிப்பு இழப்புகள், சேமிப்பு அல்லது களஞ்சிய கட்டணங்கள், குலைந்து போன சக்தி கொள்திறன் கட்டணங்கள், குறுக்கு-மானிய மிகைக்கட்டணங்கள், நடைமுறையிலுள்ள (S)PPAs முடிவடையும் காலத்தில் திறந்த அணுகலுக்கு நகர்வதற்கான தெரிவு இருக்கலாமெனும் காலம் முதிர்ந்த புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி பொறித்தொகுதிகளின் மீதான கட்டணங்கள் என்பவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுதல் வேண்டுமென்பது கிடையாது.

(ஆ) திறந்த அணுகல் உரிமம் பெற்ற எந்தவொரு மின்னுற்பத்தி, மின்சார செலுத்துகை மின்சார பகிர்ந்தளிப்பு நிறுவனத்தையும், தேசிய முறைமை இயக்குநர் எவரையும் அல்லது இறுதி-பாவனை-நுகர்வோர் எவரையும் பிரதிகூலத்தில் தள்ளிவிடுதல் கூடாது. திறந்த அணுகலில் பங்கேற்கும் வகையில் EGL இற்கு நியாயமான போட்டியின் நிமித்தம் வசதியளிக்கப்படுதல் வேண்டும். திறந்த அணுகல் அமுலாக்கதின் விளைவாக இறுதி-பாவனை-நுகர்வோர் கடுமையாக பாதிக்கப்படுதல் கூடாது.

4. வீடுகளுக்கான விஷேட சலுகை மின்சார கட்டணங்களும் (lifeline tariffs) மற்றும் ஏனைய மானிய கட்டணங்களும் தகுதியுடைய நுகர்வோரை நோக்கி இலக்குக்கொள்ளப்படுதல் வேண்டும். மானிய நிதியளிப்புகள் குறுக்கு-மானியங்களிலிருந்து படிப்படியாக நேரடி வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு நகர்த்தப்படுதல் வேண்டும்.

4.1. விஷேட சலுகை மின்சார கட்டணங்கள் (lifeline tariffs) தகுதியுடைய நுகர்வோரை நோக்கி படிப்படியாக இலக்குக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(அ) இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் காலத்தில் குடும்ப மற்றும் மதவழிபாட்டு ஸ்தல கட்டணங்களுக்கான ஆரம்ப விஷேட சலுகை மின்சார கட்டண தொகுதி 2019 இன் தேசிய சக்தி கொள்கைக்கு இணங்க மாதமொன்றுக்கு 1 முதல் 3 கிவொம என்ற அளவில் இருத்தல் வேண்டும்.

(ஆ) மாதமொன்றுக்கு 30 கிவொம என்ற அடிப்படை தேவைப்பாடு, மின்னொளியை வழங்குவதற்காக மாத்திரம் இருக்கும் வகையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டது. மிகவும் நவீன வினைத்திறன்வாய்ந்த மின்னொளி வழங்கும் உபகரணங்கள் மாதமொன்றுக்கு 30 கிவொம என்ற அளவுக்கு குறைவாக இருக்க வேண்டிய மின்னொளியை வழங்குவதற்கு தேவைப்படுத்தலாம். அதே வேளையில் அடிப்படை தேவைப்பாடுகள் போதிய காற்றோட்டம் மற்றும் குளிரூட்டல் ஆகியன போன்ற ஏனைய வாழ்க்கை ஆதார முறைமைகளுக்கும் மற்றும் கல்வி தேவைக்கும் மட்டுப்பட்டளவிலான உபகரங்களை இப்போது உள்ளடக்கலாம். தேவைகள் தொடர்பான ஒரு மதிப்பீட்டை SLSEA நடத்தி அதனை மாதமொன்றுக்கு 30 கிவொம என்ற விஷேட மின்சார சலுகை கட்டண தேவைப்பாட்டிற்கு ஏதாவது திருத்தங்களை பரிந்துரைக்கும் வகையில், இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் மின்சக்தி அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) குறைந்த வருமானமுடைய வீட்டு நுகர்வோருக்கு இடையில் கட்டுப்படியாகக்கூடிய மின்சார விலைகள் தொடர்பான ஒரு ஆய்வை ஒழுங்குறுத்துநர் மேற்கொள்ள வேண்டும். தகுதியுடைய வீட்டு நுகர்வோர் மீதான மானியங்களின் இலக்கு மேம்படுத்தப்படுதல் வேண்டும். இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒரு தடைவ மின்சார கட்டண கொள்கையில் இந்த நடவடிக்கைக்கான ஒரு திருத்தத்தின் நிமித்தம் ஒரு அறிக்கை MoE க்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) ஏனைய குடும்பங்களிலிருந்தும் மற்றும் வணிக நிலையங்களிலிருந்தும் ஈட்டப்படும் குறுக்கு-மானியத்தை கொண்டு தற்பொழுது வீடுகளுக்கும், மத வழிபாட்டு ஸ்தல வளாகங்களுக்கும் மற்றும் கைத்தொழில்களுக்கும் உரிய மானியங்களுக்கு தற்பொழுது நிதியளிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் நேரடி வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டுக்கு குறுக்கு-மானியங்களிலிருந்து படிப்படியான ஒரு நகர்வு, இதன் இலக்கு வகுதி நடைமுறைக்கு வருவதை பொறுத்து மூன்று வருட காலத்திற்குள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

4.2 தெருக்கள் மற்றும் பொது இடங்களில் விளக்குகளை அமைப்பதற்கான செலவுகள் தொடர்ந்து சமூக மயமாக்கப்படும்.

(அ) ஒழுங்குறுத்துநர் வீதி மின்னொளி வழங்கலுக்காக பிரகடனப்படுத்தும் சக்திக்கான கட்டணம் வழங்கப் படும் சேவையையும் சக்தி பாவனை காலத்தையும் கருத்திற்கொண்டு செலவு பிரதிபலிப்புடையதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வீதிகளுக்கும் பொது இடங்களுக்கும் வழங்கப்படும் மின்னொளிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களிலிருந்து எழுகின்ற செலவுகள் மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரினாலும் மற்றும் NSO ஆலும் எவரேனும் இறுதி-பாவனை- நுகர்வோருக்கு விநியோகிக்கிக்கப்படும் ஒரு மின்சார செலவுப்பட்டியலின் ஆகக்கூடியது சக்தி கூறின் 2.2% வீத அளவுக்கு அமைய எல்லா நுகர்வோர் வகுதிகளுக்கும் தொடர்ந்தும் சமூகமயப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் அந்த உரிமம் பெற்றவரின் மின்சார சேவை பிரிவில் உள்ள வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் மின்னொளியை வழங்குவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள மாதாந்த சக்தி, கொள்திறன் மற்றும் வகுதி ஆகியன தொடர்பான ஒரு கணக்கெடுப்பு ஆய்வை நடத்தி அது தொடர்பான அறிக்கையை, இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) இந்த கொள்கை நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் மின்னொளி வழங்குவது தொடர்பாக சமூகமயப்படுத்திய சக்தி கட்டணங்களை, ஒழுங்குறுத்துநர் வெளிப்படையாக பிரசுரித்து வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்களினால் மின்சார நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் மின்சார கட்டண பட்டியலிலும், அத்துடன் NSO நபரின் மூலம் மின்சார செலுத்துகை வலையமைப்பினால் நுகர்வோருக்கு மின்சாரம் விநியோகிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் மின்சார கட்டண பட்டியலிலும் குறிப்பிட்டுக்காட்டுதலும் வேண்டும்.

(உ) இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், வலுசக்தி அமைச்சு பின்வரும் சிறந்த செயன்முறைகளை பின்பற்றி, நாட்டில் வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் மின்னொளியை வழங்கும் பொறுப்பை ஏற்பதற்கும், அத்தகைய வசதிகளை புனரமைப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் பேணுவதற்கும் ஒரு நிறுவனத்தை தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிறுவனம் துல்லியமான சக்தி அளவீட்டு பொறிமுறையை தாபித்து அத்தகைய மின்னொளிகளின் சமூகமயப்படுத்திய செலவுகளை கணக்கிடுவதற்கு இயலச்செய்யும் வகையில் அத்தகைய மின்னொளியின் இயக்க மணித்தியாலங்களை கண்காணிக்க வேண்டும்.

(ஊ) சக்தி கட்டணங்களுக்கு மேலதிகமாக, வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் மின்னொளியை வழங்குவதற்கான முதலீடுகளும் மற்றும் பராமரிப்பு செலவுகளும் மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்களினாலும் மற்றும் NSO நபர்களினாலும் அறவிடப்படும் நுகர்வோர் கட்டணங்களின் மீது ஒரு வரி உள்ளடக்கப்பட்டு மேலே விவரிக்கப்பட்ட அந்த நிறுவனத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும். அமைச்சர் இந்த வரி தொகை தொடர்பான ஒரு கொள்கை வழிகாட்டியை வெளியிடுதல் வேண்டும்.

(எ) SLSEA, இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், வடிவமைப்புக்கான தொழில்நுட்ப நியமங்களையும் மற்றும் செலவுகள் சமூகமயப்படுத்தப்பட வேண்டிய தகுதியான வீதிகளையும் மற்றும் பொது இடங்களையும் நிர்ணயிப்பதற்கான வழிகாட்டல்களையும் வெளியிடுதல் வேண்டும்.

(ஏ) சேவையும் மற்றும் அணுகலும் கட்டுப்படுத்தப்படுவதற்காக பாவனையாளர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக, வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் மின்னொளி வழங்கப்படுவதற்காக செலுத்தும் வரியும் மற்றும் கட்டணங்களும் (அதிகவேக வீதிகள் மற்றும் கைத்தொழில் வலயங்கள் போன்ற) சமூகமயப்படுத்தப்படுதல் கூடாது.

5. செலவு பிரதிபலிப்பு கட்டணங்கள் ஒவ்வொரு மின்சார நுகர்வோர் வகுதிக்கும் (கொள்கை கூற்றுக்கள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் மட்டுப்பாடுகளுக்கு அமைய) ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும். இடைக்கால நிவாரணம் கடுமையாக பாதிக்கப்படும் தகுதியுடைய மின்சார நுகர்வோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

5.1. சேவை செலவுகளில் வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

(அ) ஒழுங்குறுத்துநர், இந்த கொள்கை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், பொது மக்களின் கருத்துக்களை பெறும் நிமித்தம், மின்சார விநியோக செலவை கணிப்பிடுவதற்கான முறையியலை வெளியிடுதல்.

(ஆ) ஒவ்வொரு மின்சார நுகர்வோர் கட்டண மாற்றத்தின் போதும், ஒழுங்குறுத்துநர், பகிர்ந்தளிப்பு மின்னழுத்தங்களிலும் மற்றும் மின்சார செலுத்துகை மின்னழுத்தங்களிலும் மின்சாரம் வழங்கப்படும் மின்சார நுகர்வோருக்கு, ஒவ்வொரு மின்சார நுகர்வோர் வகுதிக்கும் மற்றும் உப வகுதிக்கும் (மற்றும் சில்லறை மின்சார நுகர்வோராக இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு தொகுதியினருக்கும்) நிலையான செலவிலும், (சில்லறை மின்சார நுகர்வோருக்கான) சக்தி செலவிலும் மூன்று இடைவெளிகளில் பிரிக்கப்படும்), கேள்வி விலையிலும் (தொகை மின்சார நுகர்வோருக்கான) மற்றும் சில்லறை சேவை விலைகளிலும் சேவை செலவை பிரித்து கணிப்பிட்டு வெளியிடுதல் வேண்டும். ஒவ்வொரு சில்லறை மின்சார நுகர்வோர் வகுதிக்கும் உரிய நிலையான செலவு தேசிய மின்சார கட்டமைப்பு கொள்திறன் ஆகக்கூடியளவுக்கு பயன்படுத்தப்படும் நேரத்தில் ஒத்திசைவுடன் அந்த தேசிய மின்சார கட்டமைப்பிலுள்ள அந்த நுகர்வோர் வகுதியின் தாக்கத்தை பிரதிபலிக்க வேண்டும்.

(இ) மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோக உரிமம் பெற்றவர்களும், மின்சார செலுத்துகை மின்னழுத்தத்தில் மின்சாரம் நுகர்வோருக்கு வழங்கப்படும் பட்சத்தில் NSO நபரும், மின்சார நுகர்வோருக்கு மின்னுற்பத்தி, மின்சார செலுத்துகை, மின்சார பகிர்ந்தளிப்பு, சில்லறை சேவைகள், மொத்த செலவு, மானியம் அல்லது மிகை கட்டணம், செலவுப்பட்டியல் தொகை என்பன போன்ற செலவுகளை மின்சார நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் மின்சார கட்டணங்களில் ஆகக்குறைந்த அளவை குறிப்பிடுதல் வேண்டும். தொகையாக மின்சாரத்தை நுகர்கின்ற நுகர்வோருக்கு, மேலே கூறப்பட்ட அந்த செலவுகள் சக்தி கொள்திறனிலும் சக்தி சேவைகளிலும் பிரிக்கப்பட்டு காட்டப்படுதல் வேண்டும். வரிகளும் மற்றும் கட்டணங்களும் தனித்தனியாக காட்டப்படுதல் வேண்டும். தேசிய மின்சார கட்டமைப்புக்கு அனுப்பப்படும் சக்தி தொடர்பான உரிய தகவல்களும் மற்றும் பெறப்படும் சக்தி தொடர்பில் இணக்கல் செய்யப்பட்ட தொகைகளும், ஒப்பந்தத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு, எல்லா மின்சார நுகர்வோரினதும் செலவுப்பட்டியல்களில் காட்டப்படுதல் வேண்டும்.

5.2. இறுதி-பாவனை-நுகர்வோர் விலை கட்டமைப்பு தொடர்ந்தும் செலவை பிரதிபலிக்கக்கூடிய, சமத்துவத்தை பிரதிபலிக்கக்கூடிய மற்றும் சர்வதேச சிறந்த செயன்முறைகளை நோக்கி நகரக்கூடிய வகையில் எளிதாக அமைந்திருத்தல் வேண்டும்.

(அ) தேறிய மாணி வாசிப்பு மற்றும் தேறிய கணக்கீட்டு ஒப்பந்தங்களின் கீழ் உள்ளடங்கும் நுகர்வோர் அடங்கலாக எல்லா நுகர்வோருக்கும், மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்களினால் கணிக்கப்படும் மாதாந்த நிலையான கட்டணம், தேசிய மின்சார கட்டமைப்பிலிருந்து பெறப்பட்ட முழுமொத்த சக்தியின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். நிலையான கட்டணங்கள் பட்டியலில் விஷேட மின்சார சலுகை கட்டண நுகர்வோராக இருக்க வேண்டும் எனும் தவறான பொருள்கொள்ளல் இந்த கொள்கையின் அங்கீகார திகதியிலிருந்து முடிவுக்கு வருதல் வேண்டும்.

(ஆ) விஷேட மின்சார சலுகை கட்டணம் பெறுகின்ற மின்சார நுகர்வோராக தவறாக புரிந்துகொள்ளப்பட்டு மின்சார நுகர்வோரை செயலிழக்கச்செய்கின்ற பெறப்படும் சக்தி பூஜ்ஜியம் என பதிவாகும் சில்லறை மின்சார நுகர்வோர்களின் குறிப்பிடத்தக்கவொரு பங்கை கருத்திற்கொண்டு, மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்கள் அத்தகைய மின்சார நுகர்வோரிடமிருந்து முழு நிலையான செலவையும் அறவிடுகின்ற ஒரு கொள்கையை செயற்படுத்த வேண்டும். மின்சார நுகர்வோரை பூஜ்ஜிய நுகர்வு என்றவொரு தொகுதியினுள் கொண்டுவர முடியாது என்பதால், நிலையான செலவு அந்த நுகர்வோர் வகுதியின் கணிப்பிடப்பட்ட நிலையான செலவுகளையும் (உ-ம்: எல்லா வீட்டு நுகர்வோரும்) மற்றும் சில்லறை சேவை செலவுகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். இந்த இணைப்புகள் ஏனைய மின்சார நுகர்வோரினால் மானியமளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஒழுங்குறுத்துநர், அடுத்த கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு முன்னர், பூஜ்ஜிய நுகர்வுக்கான காரணத்தை கண்டறிவதற்கு அத்தகைய மின்சார நுகர்வோரின், மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு மாதிரி ஆய்வை அழைத்து பெற்றுக்கொள்ள வேண்டும். பூஜ்ஜிய நுகர்வு என பதிவாகின்ற அத்தகைய மின்சார நுகர்வோரிடமிருந்து அறவிட வேண்டிய நிலையான கட்டணத்தை மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் பரிந்துரைக்க வேண்டும்.

(இ) ஒழுங்குறுத்துநர், சேவைகளுக்காக அறவிடும் கட்டணத்தையும், கிறிட் வளங்களின் பாவனையையும் மற்றும் சக்தி கொள்வனவுகளையும் எளிதாக்குகின்ற 2030 ஆம் ஆண்டளவில் எளிதான மேம்பட்ட ஒரு இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டண கட்டமைப்பின் இறுதி இலக்குடன் மின்சார நுகர்வோர் வகுதிகளுக்கும் மற்றும் கட்டண கட்டமைப்புக்கும் உரிய மறுசீரமைப்புகள் தொடர்பான காலக்கட்டுப்பாடுடைய ஒரு வழிகாட்டலை தயாரித்து, வெளியிட்டு அதனை செயற்படுத்த வேண்டும். செயற்படுத்தப்பட வேண்டிய எளிதாக்கல் செயல்முறைகள்; (i) மின்சாரத்தை சேமித்து பாதுகாப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு விலை அறிகுறிகளை பேணும் அதேவேளையில் வீட்டு மற்றும் மத வழிபாட்டு ஸ்தல மின்சார நுகர்வோர் வகுதிகளில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்கக்கூடியதாகவும், (ii) எல்லா அளவு வித்தியாசங்களையும் நீக்கக்கூடியதாகவும் மற்றும் (iii) மீள்செயலாக்க சக்தி கட்டணங்களை அல்லது சக்தி காரணி அபராதங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நிலையான கட்டணங்களும் (அல்லது அளவிடப்பட்ட கேள்வியின் அடிப்படையிலான கட்டணங்கள்), சக்தி கட்டணங்கள் (பாவனை-காலத்திற்கு பிரிக்கப்பட்ட), சில்லறை சேவை, சக்தி காரணி அபராதங்கள் அல்லது அத்தகைய கட்டணங்கள் எல்லாம் ஒவ்வொரு மின்சார நுகர்வோர் வகுதிக்கும், உப வகுதிக்கும் மற்றும் தொகுதிக்கும் உரிய விநியோக செலவை முழுமையாக பிரதிபலிக்கக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றுக்குரிய நிலையான கட்டணங்கள் நிலையான செலவுகளுடன் படிப்படியாக பொருந்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும் சக்தி கட்டணங்களும் 5% ஐ விஞ்சாவொரு ஒரு வித்தியாசத்துடன் ஒவ்வொரு மின்சார நுகர்வோர் வகுதிக்கும் மற்றும் தொகுதிக்கும் உரிய சக்தி கட்டணங்களுடன் படிப்படியாக பொருந்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(உ) இறுதி-பாவனை- நுகர்வோருக்கு தன்னிச்சையாக நிர்ணயிக்கப்பட்டு ஏற்கனவே இருக்கின்ற பாவனை-கால-சக்தி கட்டணங்களும் மற்றும் மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் பொருட்டு மின்சார செலுத்துகை

யிலிருந்து வருகின்ற பரிமாற்றல்கள் தொடர்பான கட்டணங்களும் செலவை பிரதிபலிக்கக்கூடியதாக தயாரிக்கப்பட்டு, நாளினதும் மற்றும் வார நாளினதும் வித்தியாசமான நேர மின்னுற்பத்தி கலவையிலும் மற்றும் பருவகால வித்தியாசங்களிலும் அதிகரித்து வருகின்ற போக்குகள் தொடர்பான மின்னுற்பத்தி செலவுகளும் மற்றும் கணிப்பீடும் அடங்குகின்ற ஒரு பகுப்பாய்வின் ஊடாக ஒழுங்குறுத்துநரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) பாவனை-கால-கட்டணங்கள், செலவுகளை பிரதிபலிக்கின்ற கட்டணத்தின் ஒவ்வொரு ஆக்கக்கூறும் மற்றும் வித்தியாசமான பாவனை-காலங்களில் விநியோக செலவை பிரதிபலிக்கின்ற சக்தி ஆக்கக்கூறும் உள்ளடங்கும் வகையில், குறைந்த மின்னழுத்த மின்சாரத்தை நுகர்கின்ற எல்லா மின்சார நுகர்வோருக்கும் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். ஒழுங்குறுத்துநர், 2026 ஆம் ஆண்டில் நிறைவடையும் 3-பேஸ் மின்சார நுகர்வோரின் பரிவர்த்தனைக்கான உரிமம் பெற்றவர்களுடன் கலந்தாலோசித்து விரிவான காலக்கடப்பாடுடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து ஒரு இலக்கு ஆண்டளவில் எல்லா மின்சார நுகர்வோரையும் உள்ளடக்கும் வகையில் செயல்முறையை நிறைவு செய்ய வேண்டும். இந்த முன்னெடுப்பின் கீழ் நிறுவப்படும் எல்லா மின்சார நுகர்வோர் மாணிவாசிப்புகளும் தொலைவிலிருந்து அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வி தொடர்பான பதிலீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதை இயலச்செய்யக்கூடியதாக இருத்தலும் வேண்டும்.

(எ) பகிர்ந்தளிக்கப்படும் மின்னுற்பத்தியின் அதிகரித்து வருகின்ற போக்குகளுக்கு ஈடுகொடுப்பதற்கும் மற்றும் கேள்வி முகாமைத்துவத்தினதும் மற்றும் மின்சாரத்தை சேமித்து பாதுகாக்கும் செயல்முறையினதும் குறிக்கோள்களை அடைவதற்கும் அதேபோல் செயற்படுத்தப்படும் அதன் பெறுபேறுகளை அடைவதற்கும், இறுதி-பாவனை-கால கட்டணத்தில் தற்பொழுது பயன்படுத்தப்படும் கால இடைவெளிகளுக்கான மாற்றங்களை தீர்மானிக்கும் பொருட்டு ஒழுங்குறுத்துநர் ஒரு ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

6. செலவு இறுதிப் பயன்பாட்டு நுகர்வோர் கட்டணங்கள் பொருளாதார நடவடிக்கைகள், செலவு குறைந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திறமையான பயன்பாடு, கேள்வி முகாமைத்துவம் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

6.1. கேள்வி முகாமைத்துவமும் மற்றும் கேள்வி பதிலீட்டு மூலோபாயங்களும் செயற்படுத்தப்படுதல்

(அ) ஒவ்வொரு வகுதிக்கும் மற்றும் உப வகுதிக்கும் மற்றும் மின்சார நுகர்வோர் தொகுதிக்கும் உரிய மின்சார நுகர்வோர் கேள்வியின் சிறப்பம்சங்களையும் மதிப்பிடும் பொருட்டு ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டு இடைவெளிகளில், மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர், மின்பளு தொடர்பான ஒரு ஆராய்ச்சி ஆய்வை மேற்கொள்ள வேண்டும். நுகர்வோரின் தனித்துவத்தை பாதுகாக்குகின்ற அதே வேளையில் கொள்கை ஆக்கலுக்கான அணுகுதன்மையை உறுதிசெய்கின்ற விஞ்ஞான ரீதியிலான மாதிரிசேகரிப்பு (Scientific Sampling), அளவை முறையியல், மற்றும் அறிக்கையிடுதல் மற்றும் தகவல் வெளியீடு என்பன தொடர்பான வழிகாட்டிகளை ஒழுங்குறுத்துநர் தயாரித்து வழங்க வேண்டும்.

(ஆ) தடைப்படக்கூடிய கட்டணங்கள் (interruptible tariffs) மற்றும் மூலோபாய கேள்வி முகாமைத்துவம், மற்றும் நுகர்வோர் உபகரண மட்டத்தில் தலையீடுகள் என்பன போன்ற விடய அம்சங்கள் அடங்கலாக, கேள்வி முகாமைத்துவ மூலோபாயங்களையும் தொழில்நுட்பங்களையும் மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவர்கள் ஆய்வுசெய்ய வேண்டும். ஒழுங்குறுத்துநர் அத்தகைய ஆய்வுகளை மீளாய்வு செய்து கொள்கை சார்ந்த திருத்தங்களையும் மின்சக்தி அமைச்சுக்கு முன்மொழிய வேண்டும்.

(இ) கேள்வி தொடர்பான குறிப்பை மேம்படுத்தி சுலபமாக்கும் பொருட்டு, ஒழுங்குறுத்துநரின் அங்கீகாரத்துடன், மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரும், 2027 ஆம் ஆண்டு இறுதியளவில் தேர்ந்தெடுக்கப்படும் மின்சார நுகர்வோருக்கு ஆகக்குறைந்தது ஒரு கேள்வி பதிலீட்டு கட்டணத்தை கொடைமுனைவு செய்ய வேண்டும். முன்னெடுப்புக்கான மின்சார நுகர்வோர் பதிலீட்டை மதிப்பிடும் பொருட்டு ஒரு கண்காணிப்பு முறைமை தாபிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) தேவை மாற்றம், மின்சார வாகனங்கள் போன்ற நெகிழ்வான சுமைகளைப் பயன்படுத்துதல் போன்ற நெகிழ்வான சேவை தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தை NSO செயல்படுத்தும்.

6.2. விலை நிர்ணய கொள்கையின் ஆராய்ச்சியும் மற்றும் பகுப்பாய்வும் நெறிமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்

(அ) தற்பொழுது எழுகின்ற மற்றும் எதிர்காலத்தில் எழலாமென்று எதிர்வுகூறக்கூடிய விலை நிர்ணய கொள்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு பொருத்தமான விடயப்பிரிவுகளில் ஆராய்ச்சியில் கவனம் செலுத்தும் வகையில் அரசாங்க துறை அக்கறையுடைய தரப்புகளுடனும் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும்

பரஸ்பர ரீதியில் ஒத்துழைப்புடன் தொழிற்படும் ஒரு விலை நிர்ணய ஆராய்ச்சி பிரிவு வலுசக்தி அமைச்சில் தாபிக்கப்படுதல் வேண்டும். SLSEA, நிதி அமைச்சு (MOF) இனங்காண வேண்டிய ஏனைய ஏதாவது பொருத்தமான நிறுவனங்களும் இந்த பொது துறை நிறுவனங்களில் உள்ளடங்கும். இந்த அமைப்பு மேற்குறித்த ஆய்வுகளிலிருந்து சேகரிக்கப்படும் தரவுகளை வழங்கும். மின்சார நுகர்வோரின் தனித்துவத்திற்கான உரிமையினால் விதிக்கப்படும் மட்டுப்பாடுகளுக்கு அமைய, இந்த தரவுகள் கொள்கை ஆக்கும் நோக்கத்தின் நிமித்தம் ஆராய்ச்சியின் நிமித்தம் கிடைக்கச்செய்யப்படும்.

7. கட்டண நிர்ணய செயல்முறையின் தனித்துவமான சிறப்பம்சங்களின் காரணமாக எழுகின்ற இறுதி- பாவனை-நுகர்வோர் கட்டணங்களின் ஏற்றத்தாழ்வுகள், மற்றும் புதுப்பிக்கத்தக்க வளங்களின் பருவகாலத்தன்மை (Seasonality) மற்றும் கனிய எரிபொருள் விலைகளின் வித்தியாசங்கள் என்பன எளிதாக சீராக்கப்படுதல் வேண்டும்.

7.1. தொகை விநியோக கொடுக்கல்வாங்கல் கணக்கு (BSTA) உரிமம் பெற்றவர்களுக்கும் மற்றும் NSO இற்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்களை முகாமை செய்வதற்கும் மற்றும் தொகை விநியோக கொடுக்கல்வாங்கல் காலப்பகுதிகளுக்கு (BST) இடையில் ஏதாவதொரு குறைபாட்டை நிவர்த்தி செய்யும் அல்லது ஏதாவதொரு மிகையை உள்ளீர்க்கும் வகையில் நடவடிக்கையை தொடங்குவதற்கும் வழிமுறையாக இருத்தல் வேண்டும்.

(அ) குறித்த திகதியில் (appointed date) நிலவும் BSTA பகிரங்கமாக NSO ஆல் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆ) BSTA கொடுக்கல்வாங்கல்களும் மற்றும் நிதி நிலுவையும் நிதி அமைச்சுக்கும், வலுசக்தி அமைச்சுக்கும் மற்றும் ஒழுங்குறுத்துநருக்கும், ஒவ்வொரு வார இறுதியிலும், NSO ஆல் அறிக்கையிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும், அவ்வாறு அறிக்கையிடப்படும் புத்தம்புதிய வாராந்த இறுதி நிலுவை, பொதுத்தளத்தில் NSO ஆல் வெளியிடப்படுதல் வேண்டும்.

7.2. BSTA அவ்வாறு முகாமை செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்கள், மின்சார நுகர்வோருக்கு அசௌகரிகத்தை ஏற்படுத்துகின்ற மற்றும் நாட்டின் வணிக சூழலில் நிச்சயமற்ற நிலையை உருவாக்குகின்ற அத்தகைய கட்டணங்கள் போல், அடிக்கடி மாற்றப்படுதல் கூடாது.

(அ) ஓவ்வொரு வருடத்திலும் பொருத்தமானவொரு திகதியை (நீரியல் ஆண்டின் (hydrological year) ஆரம்ப திகதியான ஒக்றோபர் மாதத்தின் 1ஆம் திகதி விரும்பத்தக்கது) இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டண மாற்ற திகதியாக, ஒழுங்குறுத்துநர் வரையறுக்க வேண்டும். இந்த திகதியில், எதிர்வருகின்ற ஆண்டிற்கான விநியோகத்தின் மொத்த எதிர்வுகூறல் செலவுகள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். மேலும் இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்கள், முழு ஆண்டிற்கும், விநியோகத்தின் எதிர்வுகூறல் செலவுக்கு சமமாக இருக்கக்கூடிய வகையில் அத்தகைய எதிர்வுகூறல் வருமானமாக சீராக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் (திருத்தல்) 29 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, உரிமம் பெற்ற தரப்புகள் தொகுக்கும் தரவுகளின் அடிப்படையில், தொகை விற்பனை கட்டணத்தினதும், தொகை கொள்வனவு கட்டணத்தினதும் மற்றும் விநியோக கட்டணங்களினதும் ஒவ்வொரு காலாண்டு மீளாய்விலும், ஒழுங்குறுத்துநர், இற்றைப்படுத்தப்பட்ட கேள்வி எதிர்வுகூறல்களையும், நீரியல் வளங்களையும் மற்றும் காற்று வளங்களையும், மற்றும் எரிபொருள் விலைகளையும் மீளாய்வு செய்து, கட்டண காலத்தில் எஞ்சியிருக்கின்ற காலப்பகுதிக்கு, எதிபார்த்த BSTA நிலுவை வித்தியாசத்தை வெளியிடுதல் வேண்டும். இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டண திகதி மாறினாலொழிய, ஒழுங்குறுத்துநர் காலாண்டு மீளாய்வின் போது ஒரு கட்டண மாற்றத்தை முன்னெடுக்கக்கூடாது. எனினும், ஒழுங்குறுத்துநர், எதிர்வருகின்ற இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டண மாற்ற திகதியில் கட்டணங்களுக்கு சாத்தியமான சீராக்கல்கல்களை மேற்கொள்ளலாம்.

(இ) BSTA இல் உள்ள ஏதாவதொரு பாதகமான நிலுவைக்கு 3 ஆண்டு காலப்பகுதிக்கு ஒழுங்குறுத்து நரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வட்டியின் (வெளியிடப்பட்டுள்ள சுட்டிகளின் அடிப்படையிலான சூத்திரம்) நிலைத்திருக்கும் கடன் வசதிகளின் ஊடாக நிதியளிக்கப்படுதல் வேண்டும். அதேபோல், BSTA இல் உள்ள ஒரு பாதகமான நிலுவை அந்த BSTA இற்கு ஈர்ப்பு வட்டி (வெளியிடப்பட்டுள்ள சுட்டிகளின் அடிப்படையிலான சூத்திரம்) வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) BSTA நிலுவை, இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தாத வகையில், பருவகாலத்தன்மைக்கும் மற்றும் எரிபொருள் விலை ஏற்றத்தாழ்வுகளுக்கும் என கணக்கீடு செய்யும் வகையில், விநியோகத்தின் மொத்த வருடாந்த எதிர்வுகூறல் செலவின் சமமானவொரு பெறுமானத்திற்கு அல்லது அதன் 10% வீதத்தி;ற்கு குறைந்தவொரு பெறுமானத்திற்கு அதிகரிக்கப்படுவதற்கு அல்லது குறைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(உ) BSTA நிலுவை தொடர்ந்து இரண்டு வாரங்களாக 10% வீத அடிப்படை அளவை அடைந்துள்ளது எனும் பட்சத்தில், NSO அது பற்றி ஒழுங்குறுத்துநருக்கு அறியப்படுத்த வேண்டும். அப்போது, அந்த

ஒழுங்குறுத்துநர், மின்சார உரிமம் பெற்றவர்கள் அசாதாரண ஒரு நிலையை அடைந்துள்ளார்கள் எனவும் மற்றும் அவர்கள் இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்களை 10% வீதத்தால் அதிகரிக்கலாம் (அல்லது விடயம் அவ்வாறிருக்கலாம் என்றவாறு குறைக்கலாம்) எனவும் அந்த உரிமம் பெற்றவர்களுக்கு கட்டாயம் அறியப்படுத்த வேண்டும்.

(ஊ) நிலைமை மற்றொரு வாரத்தை தாண்டிச்செல்லாது என்பதற்கு ஏதுவான தரவுக்கும் மற்றும் பகுப்பாய்வுக்கும் உதவியாக இருக்க வேண்டுமெனும் அபிப்பிராயம் NSO இருக்குமாயின், அந்த அபிப்பிராயத்தில், BSTA குறைந்த அடிப்படை அளவை அடைகின்றது என்பதன் பேரில், ஏதாவதொரு 10% வீத அதிகரிப்பை நிறுத்திவைக்குமாறு NSO ஒழுங்குறுத்துநருக்கு பரிந்துரைக்கலாம்.

(எ) BSTA அதிகபட்ச அடிப்படை அளவை அடைகின்றது என்பதன் பேரில் ஏதாவதொரு 10% வீத குறைப்பை நிறுத்திவைக்குமாறும் மற்றும் BSTA இற்கு உதவுவதற்காக அல்லது அந்த BSTA இற்கு உதவும் வகையில் ஒரு ஒதுக்கத்தை நிர்மாணிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்படும் ஒட்டுமொத்த நிதியளிக்கும் வசதிகளுக்கு அத்தகைய நிதிகளை பிடித்துவைக்குமாறும் NSO ஒழுங்குறுத்துநருக்கு பரிந்துரைக்கலாம். பிடித்துவைக்கப்படும் அத்தகைய நிதிகள் ஒழுங்குறுத்துநரினால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கு இணங்க கட்டண நிலைப்படுத்தல் கணக்கு என இனங்காணப்படும் ஒரு தனியான கணக்கில் வைப்புச்செய்யப்படுதல் வேண்டும்.

(ஏ) இலங்கை மின்சார சட்டத்தில் அல்லது இந்த கட்டண கொள்கையில் காணப்படும் ஏற்பாடுகளின் அடிப்படையில் மாத்திரம், ஏதாவது கட்டண மீளாய்வு செயல்முறை முடிவடைவதற்கு முன்னர் அல்லது முடிவடைந்த பின்னர், MYT இன் கீழ் வழமையான ஒரு கட்டண தொகுப்பை மேற்கொள்வதை கருத்திற்கொள்ளுமாறான நிபந்தனைகளை ஒழுங்குறுத்துநர் உரிமம் பெற்றவர்களின் மீது விதிக்கலாம்.

(ஐ) கோப்புரைகளின் அடிப்படையில் ஏதாவது சீராக்கல்கள் தயாரிக்கப்படுதல் வேண்டுமென முன்கூட்டி உடன்பட்டுள்ள பாவனை கோப்புரைகளும் (templates and formats) மற்றும் மாதிரிகளும் எல்லா கணிப்பீடுகளின் போதும் உரிமம் பெற்றவர்களினாலும் மற்றும் ஒழுங்குறுத்தநரினாலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய கணிப்பீடுகள் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்படுதலும் வேண்டும். BST கணிப்பீடு, சீராக்கப்பட்ட BST, எதிர்வுகூறப்பட்ட இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்கள், BST நிலுவை வித்தியாச எதிர்வுகூறல், மின்னுற்பத்தியின் MYT நிர்ணயம், மின்சார செலுத்துகை, மின்சார பகிர்ந்தளிப்பு, மின்சார விநியோக கட்டணங்கள் மற்றும் தாமதித்த மூலதன முதலீடுகளின் மீள்பெறுகைத்தொகை என்பனவற்றுக்கு மட்டுப்படாமல் வேறுவிதமானவைகளையும் உள்ளடக்கியிருக்கலாம்.

8. மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற ஒவ்வொருவரினதும் இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்களும் மற்றும் பொருத்தமான செயற்பாட்டு அளவீட்டு தகவுதிறன்களும் தென் பிராந்தியத்திலும் மற்றும் தெற்காசிய பிராந்தியத்திலும் காணப்படுகின்ற பொருளாதாரங்களில் போட்டியிடுவதில் உள்ள கட்டணங்களுக்கு எதிராக ஒப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

8.1. இலங்கையின் கட்டணங்கள் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளின் கட்டணங்களுக்கு எதிராக ஒப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(அ) மின்னுற்பத்தி செலவுகளும் மற்றும் அனுமதிக்கப்படும் மின்சார செலுத்துகை வருமானமும், அனுமதிக்கப்படும் மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோக சேவைகள் வருமானமும் வழங்கப்படும் கிவொம அடிப்படையிலும் மற்றும் ஏனைய பொருத்தமான அடிப்படைகளிலும் ஆகக்குறைந்தது அந்த பிராந்தியத்திலுள்ள 10 நாடுகளுடன் அல்லது மின்சார நிறுவனங்களுடன் ஒப்பிடப்பட்டு ஒழுங்குறுத்துனரினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆ) MYT கால ஆரம்பத்தில், மின்சார செலுத்துகை கட்டணங்கள் மேலும் செலவுகளை குறைப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கி ஒழுங்குறுத்துநரினால் வெளியிடப்படும் ஒரு வெளியீட்டில், பிராந்தியத்திலுள்ள அதையொத்த மின்சார செலுத்துகை நிறுவனங்களுடன் ஒப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(இ) ஒரேமாதிரியான நுகர்வோருக்குரிய இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்கள் அந்த பிராந்தியத்திலுள்ள ஆகக்குறைந்தது 10 நாடுகளுடன் அல்லது மின்சார நிறுவனங்களுடன் ஒப்பிடப்பட்டு ஒழுங்குறுத்துநரினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

8.2. மின்சார விலைகள் தொடர்பான எதிர்கால பணிப்புரைகள் வெளிப்படைத்தன்மையுடையதாக வெளியிடப்படுதல் வேண்டும்

(அ) மின்னுற்பத்தி விரிவாக்கல் திட்டத்தினதும் மற்றும் மின்சார செலுத்துகை விரிவாக்கல் திட்டத்தினதும் மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள மின்சார பகிர்ந்தளிப்பு விரிவாக்கல் திட்டங்களினதும் ஒவ்வொரு மீளாய்வையும் ஒழுங்குபடுத்த NSO ஆல் ஆகக்குறைந்தது 10 ஆண்டுகள் சராசரி நுகர்வோர் கட்டண எதிர்வுகூறல் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். தற்போதுள்ள பொறுப்புக்களும் மற்றும் தேசிய மின்சார கட்டமைப்பின் நிலையான மற்றும் வித்தியாசமான செலவுகளின் திட்டமிடப்பட்ட எதிர்கால பொறுப்புக்களும் குறித்த அந்த எதிர்வுகூறல் திட்டத்தில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

(ஆ) கட்டண தரநிர்ணய ஆய்வினதும் மற்றும் எதிர்வுகூறல் கட்டணங்களினதும் அடிப்படையில், ஒழுங்குறுத்துநர், இறுதி-பாவனை-நுகர்வோர் கட்டணங்களை போட்டித்தன்மை வாய்ந்ததாக ஆக்கக்கூடிய வழிமுறைகள் தொடர்பான ஒரு அறிக்கையை அமைச்சருக்கு தயாரித்து வழங்க வேண்டும்.

9. கட்டணங்கள், உரிமம் பெற்றவர்கள் நிதி ரீதியில் சுயநிதியீட்டக்கூடிய நிறுவன தரப்புகளாக இருக்கின்றனரா என்பதை உறுதிசெய்யும் வகையில் கட்டமைக்கப்படுதல் வேண்டும்.

(அ) இந்த கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் அதன் 1 முதல் 8 வரையான தத்துவங்களின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ள மூலோபாயங்களினதும்; செயற்படுத்துகை வலையமைப்பினதும் ஊடாக அடையப்படும்.

இந்த கொள்கை ஆவணத்தை செயற்படுத்தும் நோக்கத்தின் நிமித்தம் வலுசக்தி அமைச்சர் இது பற்றி தெளிவுபடுத்தலாம், விளக்கமளிக்கலாம் அல்லது இதற்கு தேவையான ஏதாவது மாற்றங்களை செய்யலாம் என 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் (திருத்தல்) 4(10) ஆம் பிரிவுகளின் நியதிகளில் குறிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

EOG 3 - 0064

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.